Vlambaram - January 01, 2025.qxp_Vlambaram-Front 2025-01-02 1:00 PM Page 1

கனடாவின் மூத்த தமிழ் இதழ்    விளம்பரம்™ • VLAMBARAM™    Canada's Oldest Tamil Newspaper

35ஆவது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM
email: vlambaram@sympatico.ca    Tel: 416-282-8059    www.vlambaram.com

நிதி: 35    பாலம்: 01    சமூக முன்னேற்றப்பத்திரிகை    மாதமிருமுறை    இலவசம்    JANUARY 01, 2025







# இலையுதிர்கால பொருளாதார அறிக்கை

கனடிய மத்திய அரசின் இலையுதிர்காலப் பொருளாதார அறிக்கையை அரசவைத் தலைவர் கரினா கோல்ட் (Karina Gould) 2024 டிசெம்பர் 16ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். மத்திய அரசு இந்த அறிக்கையை நாடாளு மன்றத்தில் சமர்ப்பிக்கத் தாமதித்து வருவதாக எதிர்க்கட்சித்தலைவர் பியர் பொலியவ் (Pierre Poilievre) நாடாளு மன்றத்தில் பலமுறை லிபரல் அரசின்மீது குற்றம் சாட்டியிருந்தார். இம்முறை அரசு வழமையைவிட காலதாமதமாகவே இலை யுதிர்காலப் பொருளாதார அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தது.

அரசவைத்தலைவர் கரினா கோல்ட் சமர்ப்பித்த இந்தப் பொருளாதார அறிக்கையில் 2023-2024 நிதியாண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகையாக $61.9 பில்லியன் இருந்த தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் 2023ஆம் ஆண்டின் இலையுதிர்காலப் பொருளாதார அறிக்கையை அப்போதைய நிதியமைச்சர் கிறிஸ்டியா ப்ரீலண்ட் (Chrystia Freeland) நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும்போது லிபரல் அரசு 2023-2024 நிதியாண்டின் வரவு-செலவுத் திட்டத்தின் துண்டுவிழும் தொகையை $40.1 பில்லியனுக்குமேல் அதிகரிக்க விடமாட்டாது என ஒரு சுயகட்டுப்பாட்டை விதித்ததை மீறி மேலதிகமாக $21.8 மில்லியன் செலவழிக்கப்பட்டுள்ளது.

டிசம்பர் 16ஆம் திகதி லிபரல் அரசின் இலையுதிர்காலப் பொருளாதார அறிக் கையை நிதியமைச்சராக இருந்த கிறிஸ்டியா ப்ரீலண்ட் சமர்ப்பிப்பார் என எல்லோரும் எதிர்பார்த்துக் கொண்டிருந்த வேளையில் அன்று காலை கிறிஸ்டியா ப்ரீலண்ட் தனது துணைப்பிரதமர், நிதி யமைச்சர் பதவிகளிலிருந்து யாரும் எதிர்பார்க்காத வகையில் திடீரென தனது பதவிவிலகல் கடிதத்தைச் சமர்ப்பித்தார். இதைத் தொடர்ந்து கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ தனது பொதுப் பாதுகாப்பு அமைச்சராகப் பதவி வகித்த டொமினிக் லப்லாங்கை (Dominic LeBlanc) நிதி அமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

கிறிஸ்டியா ப்ரீலண்ட் ஊடகங்களுக்கத் தெரிவிக்கையில், "டிசெம்பர் 13ஆம் திகதி ஜஸ்ரின் ரூடோ நிதியமைச்சராக தொடர்ந்தும் நான் பணியாற்றுவதை அவர் விரும்பவில்லை. டிசெம்பர் 16ஆம் திகதி நான் நாடாளுமன்றத்தில் பொருளாதார அறிக்கையைச் சமர்ப்பித்த பின்னர் எனக்கு அமைச்சரவையில் வேறு ஒரு முக்கிய பங்கு தருவதாகவும் கூறினார்" என்றார்.




கிறிஸ்டியா ப்ரீலண்ட் தனது பதவி விலகல் கடிதத்தில் தற்போதைய நிலை யில் எனக்கு நேர்மையானதும் மற்றும் சாத்தியமானதுமான பாதை அமைச் சரவையைவிட்டு வெளியேறுவது மட்டுமே என்று எழுதியிருந்தார். அத்துடன் அவர் "கடந்த பல வாரங்களாக கனடாவை சிறந்த பாதையில் முன்னேற்றுவதற்கான முயற்சிகளில் நீங்களும் நானும் முரண் படுகிறோம்" என்றும் தெரிவித்திருந்தார்.

கனடிய மத்திய அரசு அண்மையில் அறிவித்த இரண்டு மாத கால GST/HST வரிவிலக்கு மற்றும் அறிவிக்க இருந்த தொழில்புரிவோருக்கு ஒருமுறை வழங்க இருந்த $250 தொழிலாளர் நலன் பண உதவி இரண்டையும் அரசு தவிர்க்க வேண்டும் என்பதில் கிறிஸ்டியா ப்ரீலண்ட் தீவிரமாக இருந்தார். இவை இரண்டும் வீணான செலவீனங்கள். புதிய அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கனடாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 25% வரியை விதிக்கப் போவதாக கூறியுள்ளார். எங்கள் நாடு ஒரு பெரிய சவாலை எதிர்க்கொள்கிறது. இதனால் நாங்கள் இவ்வாறான தரக்குறை வான அரசியல் வித்தைகளை (Gimmicks) அதிக பணச்செலவில் காட்டத் தேவை யில்லை. இவற்றைத் தவிர்க்க வேண்டும் என்று கிறிஸ்டியா ப்ரீலண்ட் தெரிவித் திருந்தார். இந்த முரண்பாட்டு நிலையே அவரின் பதவி விலகலுக்கு முக்கிய காரணம் என ஊடகங்கள் தெரிவிக்கின்றன.




புதிய ஜனநாயகக் கட்சி மத்திய அரசின் இரண்டு மாத கால GST/HST வரி விலக்கிற்கு ஆதரவு அளித்ததால் அப் பிரேரணை நாடாளுமன்றத்தில் நிறை வேற்றப்பட்டது. கனடிய மக்கள் குறிப்பிட்ட சில பொருட்களுக்கு டிசெம்பர் 14ஆம் திகதியிலிருந்து இரண்டு மாத காலத்திற்கு இந்த வரிவிலக்கை அனுபவிப்பர்.

புதிய ஜனநாயகக் கட்சி மத்திய அரசின் தொழில்புரிவோருக்கு ஒருமுறை வழங்க இருந்த $250 தொழிலாளர் நலன் பண உதவி தொழில் புரியாதவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என மத்திய அரசைக் கேட்டது. அதற்கு அரசு சம்மதிக்காதபடியால் புதிய ஜனநாயகக் கட்சி அரசின் முயற்சிக்கு ஆதரவு தெரிவிக்க மறுத்து விட்டது. இதனால் இந்த $250 தொழிலாளர் நலன் பண உதவித் திட்டம் மத்திய அரசால் கைவிடப்பட்டது.

கிறிஸ்டியா ப்ரீலண்ட்இன் பதவி விலகல் குறித்து கருத்துத் தெரிவித்த அமெரிக்க அதிபராக தெரிவு செய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப், "ஜஸ்ரின் ரூடோவால் பதவி விலக்கப்பட்டதோ அல்லது தானா கப் பதவி விலகிய நிதியமைச்சரால் கனடா திகைத்து நிற்கின்றது. அவருடைய நடத்தை முற்றிலும் நச்சுத்தன்மை வாய்ந்தது (totally toxic). அவரது பதவி விலகலால் ஒரு நட்டமும் ஏற்படப் போவதில்லை" என்று கூறியிருந்தார்.

டொனால்ட் ட்ரம்ப் முதன்முறை அமெரிக்க அதிபராகப் பதவி வகித்தபோது அப்போது இருந்த NAFTA ஒப்பந்தத்தைத் திருத்தி CUSMA ஒப்பந்தமாக மாற்றும் அவரது முயற்சியில் கனடாவின் சார்பில் பங்கு பற்றி தீவிரமாக வாதாடி அந்த ஒப்பந்தம் கனடாவை பாதிக்காமல் அமைய முன்னுக்கு நின்றவர் கிறிஸ்டியா ப்ரீலண்ட் என்பது குறிப்பிடத்தக்கது. இதனாலேயே அவர் கனடிய அமைச்சரவையில் இல்லா விட்டால் 2026 ஜுலையில் CUSMA ஒப்பந்தத்தைப் புனரமைக்க விரும்பும் டொனால்ட் ட்ரம்ப்இற்கு அது வசதியாக இருக்கும் என்பதாலேயே அவரின் பதவி விலகலால் ஒரு நட்டமும் இல்லை என டொனால்ட் ட்ரம்ப் கூறியிருக்கலாம்.

இந்தக் காரணத்திற்காகவே கிறிஸ்டியா ப்ரீலண்ட்இற்கு கனடா - அமெரிக்க உறவு களுக்குப் பொறுப்பாக அமைச்சரவைக்குச் சமமான ஒரு பதவி வழங்கி அவரை அமெரிக்க உறவுகள் குறித்த அமைச்சர வைக் குழுவின் தலைவராக்கவே அவரிட மிருந்து நிதியமைச்சர் பதவியை ஜஸ்ரின் ரூடோ எடுக்க விரும்பினார் என லிபரல்

தொடர்ச்சி 05ஆம் பக்கம்












| RENT | BUY | SELL | INVEST | LEASE |
|---|---|---|---|---|

# In CANADA from anywhere in the world

- Respectable Real Estate Brokerage based in Toronto
- Over 20 Years in the business
- Over 150 Sales Representatives.
- Brokers combined experience over 50 Years
- Well connected with Builders, Developers,
Mortgage Brokers, Home Inspectors, Insurers ....






**For
more information
Feel Free
to call or
visit to
www.hlgtarealty.com**



HOMELIFE
HIGHER STANDARDS

## HomeLife/GTA Realty Inc. Brokerage*

5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S 0C2

**Tel: 416-321-6969** * Independently owned and operated.




Available Till Midnight
Including Weekends & Holidays

ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS

PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL

MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS

416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# அனுர அரசின் புத்தாண்டு சவால்

**– அரவின் –**

நாடாளுமன்றத் தேர்தல் காய்ச்சல் அடங்கத் தொடங்கியுள்ள நிலையில், மீண்டும் அடுத்த தேர்தலுக்கான முன்னறிவிப்புகள் வெளிவரத் தொடங்கியிருக்கின்றன.

இந்தியாவுக்கான மூன்று நாள் பயணத்தை முடித்துவிட்டு நாடு திரும்பிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னதாக உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்தப்படும் என அறிவித்திருக்கிறார்.

உள்ளூராட்சித் தேர்தலை விரைவாக நடத்தவேண்டிய பொறுப்பு, அரசாங்கத்திற்கும் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கும் இருக்கிறது.

இந்தத் தேர்தல், 2023ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடத்தப்பட்டிருக்க வேண்டியது.

அப்போது, வேட்புமனுக்கள் பெறப்பட்டன. தேர்தலுக்கான திகதியும் அறிவிக்கப்பட்டது. ஆனால், ஆட்சியில் இருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம், உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படுவதை விரும்பவில்லை.

அவ்வாறு உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்தப்பட்டால், அது ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளைப் பாதிக்கும் எனக் கருதி, நடத்த விடாமல் தடுத்தது.

தேர்தல்கள் ஆணைக்குழுவை நேரடியாக தடுக்க முடியாத அரசாங்கம், அதற்கான நிதியை வழங்காமல் மறைமுகமான முறையில் தடை போட்டது. இதனால் உள்ளூராட்சித் தேர்தலுக்கு மூன்று முறை திகதி குறிக்கப்பட்டு ஒத்திவைக்கப்பட்டது. அதன்பின்னர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்துடன் முட்டி மோதி தேர்தலை நடத்த முடியாது எனத் தெரிந்துகொண்ட தேர்தல்கள் ஆணைக்குழு, அந்த முயற்சியைக் கைவிட்டு விட்டது.

உள்ளூராட்சித் தேர்தல்கள் ஒத்திப் போடப்பட்டதற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட அடிப்படை உரிமை மீறல் வழக்கில், உடனடியாக தேர்தலை நடத்துமாறு, கடந்த 2024 ஓகஸ்ற் 22ஆம் திகதி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.



அப்போது, ஜனாதிபதித் தேர்தலுக்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. அந்தத் தேர்தலை நடத்தி முடிக்கும்வரை எதையும் செய்ய முடியாத நிலை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு இருந்தது.

ஜனாதிபதித் தேர்தல் முடிந்தபின்னர், ஆட்சிக்கு வந்த அனுரகுமார திசாநாயக்க, நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலுக்கு உத்தரவிட்டார். அதனால் உயர்நீதிமன்றத்தின் அந்த உத்தரவு கிடப்பில் போடப்பட்டது.

பொதுத் தேர்தலுக்குப் பின்னர், உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்தப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்டது.

பொதுத்தேர்தல் முடிந்து ஒரு மாதம் கடந்துவிட்ட நிலையில், ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்களின் அடிப்படையில், உள்ளூராட்சித் தேர்தல்களை எதிர்கொள்வதற்கு அரசியல் கட்சிகள் தயாராக இல்லை.

ஏனென்றால், அப்போது இருந்த அரசியல் நிலை, கூட்டணிகள் வேறு, இப்பொழுது உள்ள அரசியல் நிலையும், கூட்டணிகளும் வேறாக இருக்கின்றது.

அப்போது பொதுஜன பெரமுனவின் கூட்டணியில் இருந்த கட்சிகள்_வேட்பாளர்கள் இப்போது அதிலிருந்து வெளியேறி வேறு கட்சிகளுடன் கூட்டணி அமைத்திருக்கின்றனர். அல்லது இணைந்திருக்கின்றனர்.

அரசியல் குழப்பங்கள் பல நிகழ்ந்து விட்டதால், முன்னைய வேட்புமனுவின் அடிப்படையில் தேர்தலை நடத்த முடியாது என அரசியல் கட்சிகள் ஒரே நிலைப்பாட்டை எடுத்தன.

அதேவேளை பழைய வேட்புமனுக்களின் அடிப்படையில் தேர்தல்களை நடத்துவதில், வேறு பல சிக்கல்களும் இருந்தன. உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்புமனு தாக்கல் செய்தோரில் பலர், இப்போது உயிருடன் இல்லை. இன்னும் பலர் வெளிநாடுகளுக்குச் சென்று விட்டனர். இவர்களுக்கு மாற்று வேட்பாளர்களை உள்ளீர்ப்பதற்குச் சட்டரீதியான சிக்கல்கள் இருந்தன.

அதைவிட, உள்ளூராட்சித் தேர்தலில் வேட்பாளர் பட்டியலில் 30 சதவீதம், இளைஞர்கள் உள்ளடக்கப்பட வேண்டும் என்ற கட்டாய விதிமுறை இருக்கிறது. இப்போது தேர்தல் நடத்தினால், இளைஞர்களுக்கான வயதெல்லையைக் கடந்தோரும் பட்டியலுக்குள் சேர்ந்து விடுவர்.

அதேபோல கடந்த இரண்டு ஆண்டுகளில் வாக்காளர்களாக இணைந்துகொண்ட இளம் வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பையும் பெறமுடியாமல் போகும்.

இப்படிப் பல்வேறு சிக்கல்கள் காரணமாக முன்னைய வேட்பாளர் பட்டியல் அடிப்படையில் தேர்தலை நடத்துவதற்கு அரசியல் கட்சிகள் எதிர்ப்பு வெளியிட்டன.

ஒருமனதாக அரசியல் கட்சிகள் இந்த வேட்புமனுவை ரத்துச் செய்துவிட்டு புதிதாக வேட்புமேனுக் கோரி தேர்தலை நடத்த வேண்டும் என்ற முடிவை எடுத்தன. அதற்கு அரசாங்கம் இணங்கியதை அடுத்து, தேர்தலுக்கான அடுத்த கட்ட ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

அதன் அடிப்படையில்தான் ஏப்ரல் மாதத்திற்குள் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படும் என ஜனாதிபதி அறிவித்திருந்தார்.

ஆனால் ஏப்ரல் மாதத்தில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு முதலில் வேட்புமனுக்களை ரத்துச் செய்வதற்கான ஒரு சட்டத்திருத்தம் நிறைவேற்றப்பட வேண்டும்.

நாடாளுமன்றத்தில் ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றுவதற்கு சில படிமுறைகள் இருக்கின்றன.

முதலில் அந்தச் சட்டமூலம் வரையப்பட்டு அமைச்சரவை அங்கீகாரத்துடன் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டும். அதன் பின்னர்தான் நாடாளுமன்றத்தில் முதல் வாசிப்புக்காகச் சமர்ப்பிக்கலாம். ஆனால் உடனடியாக அதனை நிறைவேற்ற முடியாது.

உயர் நீதிமன்றத்தில் அந்தச் சட்டமூலத்திற்கு எதிராக யாரேனும் முறையீடு செய்வதற்கு வாய்ப்பு வழங்கும் வகையில், 14 நாட்கள் கால அவகாசம் அளிக்கப்பட வேண்டும். அந்தக் கால அவகாசம் முடிந்த பின்னரே சட்டமூலத்தை நிறைவேற்ற முடியும். அப்படிச் சட்டமூலத்தை நிறைவேற்றினாலும்கூட உடனடியாகத் தேர்தலை நடத்த முடியாது.

உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு வேட்புமனுக்களைக் கோருவதற்கு, அவை ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர்தான் தேர்தல் திகதி அறிவிக்கப்படும்.

தேர்தல் பிரச்சாரத்துக்கு என குறிக்கப்பட்ட கால இடைவெளியை அளிக்காமல் தேர்தல் திகதியை தீர்மானிக்க முடியாது. அந்தவகையில் பார்த்தால் தேர்தல் திகதியை தீர்மானிப்பதற்கு கிட்டத்தட்ட மார்ச் மாதத்திற்குமேல் ஆகிவிடும்.

ஆனால் மார்ச் மாதம் 17ஆம் திகதி முதல் 26ஆம் திகதிவரை க.பொ.த சாதாரணதரப் பரீட்சை நடைபெறப் போகிறது. பரீட்சைக் காலத்தை அண்டியதாக தேர்தல் திகதியை அறிவித்தால், பரீட்சைகள் பாதிக்கப்படும்.

இவ்வாறான நிலையில் புத்தாண்டுக்கு முன்னர் அதாவது ஏப்ரல் 15ஆம் திகதிக்கு முன்னர் தேர்தலை நடத்துவதற்கு சாத்தியம் இல்லை என சில தரப்பினர் கூறுகின்றனர். ஆனால் அரசாங்கமோ சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் தேர்தல் நடத்தப்படும் என்கிறது.

அரசாங்கத்துக்கும் இந்தத் தேர்தல் அவசரமாக நடத்தப்படுவதில் உடன்பாடு கிடையாது. ஏனென்றால், தற்பொழுது அரசாங்கம் அளித்த வாக்குறுதிகள் பலவற்றை நிறைவேற்றவில்லை என்ற குறைபாடுகள் மேல் எழத் தொடங்கி இருக்கின்றன.

அரிசி விலையைக் கட்டுப்படுத்துவதில், தட்டுப்பாடு இல்லாத விநியோகத்தை உறுதிப்படுத்துவதில், அரசாங்கம் தோல்வி அடைந்திருக்கிறது. இறக்குமதியை அனுமதித்தும் அதனைச் செய்ய முடியவில்லை என்று, அமைச்சரவைப் பேச்சாளரான நளிந்த ஜெயதிஸ்ஸ ஒப்புக்கொண்டு இருக்கிறார்.

மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பதாக வாக்குறுதி அளித்த அரசாங்கம், அடுத்த ஆறு மாதங்களுக்கு அதனைக் குறைப்பதற்கு தடை போட்டிருக்கிறது.

எரிபொருளும்கூட வாக்குறுதி அளிக்கப்பட்டதுபோல, மூன்றில் ஒரு பங்கு விலைக் குறைப்பு மேற்கொள்ளப்படவில்லை.

இவ்வாறாக பல்வேறு வாக்குறுதிகள் அரசாங்கத்தினால் உடனடியாக நிறைவேற்ற முடியாத நிலை காணப்படுகிறது.

இந்தச் சூழலில் தேர்தல் நடத்தப்படுகின்றபோது, ஆளும்கட்சியின் வெற்றியைப் பாதிக்கும் என்ற கருத்தும் உள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலில் எதிர்பாராத வகையில் தேசிய மக்கள் சக்தி மிகப் பிரமாண்டமான வெற்றியைப் பெற்று விட்டது.

உள்ளூராட்சித் தேர்தலில் அந்த வெற்றியைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டும்.

சற்று வாக்கு வீதம் குறைந்து போனாலும், அது அரசாங்கத்தின் பலவீனமாகப் பார்க்கப்படும். எனவே உள்ளூராட்சித் தேர்தல் அரசாங்கத்திற்கு கத்தியில் நடக்கின்ற பயணம் போன்றது.

உயர்நீதிமன்றம் உத்தரவிட்டு விட்டதால் அதனை விரைவாக நடத்தியாக வேண்டும். விரைவாக நடத்தினாலும் சறுக்கி விழாமல் இருக்க வேண்டும்.

இந்த இரண்டையும் அனுரகுமார அரசாங்கம் புதிய ஆண்டில் எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறது என்பதுதான், முக்கியமான சவாலாக இருக்கப் போகிறது.

விளம்பரம்
VLAMBARAM
35ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலகப் பொறுப்பாளர்: சுதர்சினி D.
'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.
Vlambaram Publications Inc.
GTA Square, 5215 Finch Ave.E.,
#201, Toronto, ON M1S 0C2, Canada
TEL- 416-282-8059
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

# இலையுதிர்கால.....

01ஆம் பக்கத்தொடர்ச்சி

கட்சியின் அதிகாரி ஒருவர் The Associated Press ஊடகத்திடம் தெரிவித்திருந்தார் என அச்செய்தி ஊடகம் தெரிவித்தது. இந்தப் பொருளாதார அறிக்கையில் கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு டொனால்ட் ட்ரம்ப்பினால் விதிக்கப்படும் 25% வரியைத் தவிர்க்கும் முகமாக கனடிய அமெரிக்க எல்லைப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக $1.3 பில்லியனை அரசு ஒதுக்கி உள்ளது. கனடிய எல்லை சேவைகள் நிறுவனம் (Canada Border Services Agency) தகவல் தொடர்பு பாதுகாப்பு நிறுவனம் மற்றும் RCMP நிறுவனங்களுக்கு மேலதிக பணியாட்கள் மற்றும் உபகரணங்கள் வழங்குவதன்மூலம் உலகிலேயே மிகவும் நீண்ட எல்லையைக் கொண்டுள்ள கனடிய அமெரிக்க எல்லைப் பாதுகாப்பைப் பலப்படுத்த மத்திய அரசு தீவிர முயற்சி எடுக்க உள்ளது. டொனால்ட் ட்ரம்ப் கனடா தனது எல்லையைப் பாதுகாத்து அதனூடாக வரும் சட்டப்பூர்வமற்ற குடியாளர்களையும், போதைப் பொருட்கள் கடத்தலையும் தடுக்காவிட்டால், தான் கனடிய இறக்குமதிப் பொருட்களுக்கு 25% வரிவிதிக்கப் போவதாகக் கூறியிருந்தார். இலையுதிர்கால பொருளாதார அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள கனடிய அமெரிக்க எல்லையைப் பாதுகாக்க எடுக்கப்படவுள்ள நடைமுறைகள் டொனால்ட் ட்ரம்ப்இற்கு திருப்தி அளிக்குமா? அதன்மூலம் அவர் கனடிய இறக்குமதிப் பொருட்களுக்கு வரிவிதிப்பதைத் தவிர்ப்பாரா? என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் என ஊடகவியலாளர் தெரிவிக்கின்றனர்.



Government House leader Karina Gould tables the Fall Economic Statement in the House of Commons

அரசவைத்தலைவர் கரினா கோல்ட் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த இலையுதிர்கால பொருளாதார அறிக்கை 270 பக்கங்களைக் கொண்டது. அதில் கனடா தான் G7 நாடுகளில் முதலில் மத்திய வங்கியின் வட்டி வீதங்களைக் குறைத்த நாடு எனவும், பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தி பணவீக்கத்தை 2%இற்குள் கொண்டுவந்த நாடு எனவும் கூறப்பட்டுள்ளது. இதற்கு லிபரல் அரசாங்கத்தின் விவேகமான நிதி நிர்வாகமே காரணமாக இருந்தது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




கோவிட்-19 தொற்று நோய்ப் பரவலைத் தொடர்ந்து, உக்ரைனில் நடைபெறும் ரஷ்யாவின் போரினாலும், ஏற்பட்டுள்ள உலகளாவிய பொருளாதார நிச்சயமற்ற நிலைக்கு மத்தியில் லிபரல் அரசாங்கத்தின் பொருளாதாரத்திட்டம் இப்போதும் மற்றும் வரவிருக்கும் ஆண்டுகளிலும் பொருளாதார வளர்ச்சிக்கு வலுவான அடித்தளத்தை அமைத்துள்ளது.

இந்தப் பொருளாதார அறிக்கையில் 23-24 நிதியாண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகை $61.9 பில்லியனாக இருந்தது. இது 24-25ஆம் நிதியாண்டில் $48.3 பில்லியன் துண்டுவிழும் தொகையாகக் குறைத்து, 25-26ஆம் நிதியாண்டில் $42.2 பில்லியனாகி பின்னர் 26-27ஆம் நிதியாண்டில் $31.0 பில்லியன் துண்டுவிழும் தொகையாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த அறிக்கையில் அரசாங்கத்தின் பொருளாதாரத் திட்டம் நான்கு முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை முதலாவது குழந்தைப் பராமரிப்பு, பல் பராமரிப்பு போன்ற எமது தலைமுறைகளிற்காக முதலிடுவது. இரண்டாவது AI போன்ற தொழில்நுட்ப நன்மைகளைப் பாதுகாக்க முதலிடுவது. மூன்றாவது புவிசார் அரசியல் அபாயங்கள் மற்றும் நிச்சயமற்ற தன்மையைத் தாண்டுவதற்காக முதலிடுதல். நான்காவதும் இறுதியானதும் தொழில்துறை மாற்றங்களில் முதலிடுவதும் ஆகும்.




தீயணைப்பு வீரர்கள், எல்லைச் சேவை அதிகாரிகள், நாடாளுமன்ற பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் முன்னணியில் நின்று பாதுகாப்பு சேவை வழங்குவோர் தற்போது தமது 25 ஆண்டுகால சேவையின் பின்னர் குறைக்கப்படாத ஓய்வூதியத்துடன் தமது பணியில் இருந்து ஓய்வு பெற அனுமதி வழங்கப்படுகிறது.

2024ஆம் ஆண்டிற்கான கனடாவின் கடனுக்கும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் இடையேயான வீதம் (Debt to GDP) 14.4%ஆக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை கனடாவைத் தவிர்த்த மற்றைய G7 நாடுகளினதும் சராசரியான கடனுக்கும் மொத்த உள்நாட்டு உற்பத்திற்கும் இடையேயான வீதம் 103.8%ஆக இருப்பது குறிப்பிடத்தக்கது. ஒரு நாட்டின் பொருளாதார மற்றும் நிதி நிலைத்தன்மையைப் (Fiscal Sustainability) பாதுகாப்பதற்கும் அந்நாட்டின் கடனுக்கும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்குமான வீதம் குறைவாக இருக்க வேண்டும்.



Canada Finance Minister Dominic LeBlanc

கனடியரின் சராசரி வருமானம் 2019ஆம் ஆண்டில் இருந்ததைவிட 6%ஆல் தற்போது அதிகரித்துள்ளது. இது ஒரு தொழிலாளியின் சம்பளத்தில் அதிகமாகப் பொருட்களை வாங்கும் திறனைக் காட்டி நிற்கிறது. இதேவேளை இதே கால கட்டத்தில் அமெரிக்கர்களின் சராசரி வருமானம் 3.4% அதிகரித்துள்ளது.

G7 நாடுகளில் கனடாவே அதிகூடிய வெளிநாடுகளின் முதலீட்டை (சனத் தொகையின் அடிப்படையில்) பெறுவதாக Bloomberg நிறுவனம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. கனடாவே உலகத்திலேயே மிகவும் அதிக அளவு மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களின் விநியோகத்தைச் செய்யும் திறனைக் கொண்டு உள்ளது. இத்துறையில் கடந்த நான்கு ஆண்டுகளில் கனடா $40 பில்லியனுக்கு அதிகமான முதலீட்டை வெளிநாடுகளிடம் இருந்து பெற்றுள்ளது.

மின்சாரத்தில் இயங்கும் வாகன உற்பத்திக்கு Honda நிறுவனம் ஒன்ராறியோ மாகாணத்தில் $15 பில்லியனை முதலிட்டு உள்ளது. அதேவேளை Volkswagen நிறுவனமும் மின்சாரத்தில் இயங்கும் வாகன உற்பத்திக்கு $7 பில்லியனை ஒன்ராறியோவில் முதலிட்டுள்ளது. Dow நிறுவனம் அல்பேட்டா மாகாணத்தில் $8.9 பில்லியனில் நிகர பூஜ்ஜிய உமிழ்வு ஆய்வு நிறுவனத்தை அமைக்க உள்ளது. BHP நிறுவனம் சஸ்கச்சுவான் மாகாணத்தில் $14 பில்லியனை மிகக்குறைந்த காபன் வெளியிடும் பொட்டாஷ் (Potash) சுரங்கத்தை அமைக்க முதலிடுகின்றது.



Former Finance Minister Chrystia Freeland

Strathcona ஆய்வு நிறுவனம் சஸ்கச்சுவான் மற்றும் அல்பேட்டா மாகாணங்களில் மண்ணிலிருந்து கச்சாய் எண்ணெய் எடுக்கும்போது வெளியேறும் காபன் வாயுக்களை நிலத்திற்குக் கீழ்சேகரிக்கும் தொழில்நுட்பத்திற்கு $2 பில்லியனை வழங்குகிறது.

டிசெம்பர் 16ஆம் திகதி துணைப்பிரதமர் மற்றும் நிதியமைச்சர் பதவிகளில் இருந்து கிறிஸ்டியா ப்ரீலண்ட் பதவி விலகியதுடன் லிபரல் அரசின் அமைச்சரவையில் வீட்டுவசதி உள்கட்டமைப்பு மற்றும் சமூகங்கள் அமைச்சர் சோன் ப்ரேசர் (Sean Fraser) தான் அடுத்த முறை நடைபெறும் பொதுத்தேர்தலில் போட்டியிடப்போவது இல்லை எனக் கூறி தனது அமைச்சர் பதவியில் இருந்து விலகினார். இவ்வாறான அமைச்சர்களின் பதவி விலகலைத் தொடர்ந்து எதிர்க்கட்சிகள் கனடியப் பிரதமரையும் பதவி விலகி நாட்டில் பொதுத்தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தினர். புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் ஜக்மீத் சிங் (Jagmeet Singh) பிரதமர் பதவி விலகாவிடின் அடுத்த முறை நாடாளுமன்றம் ஜனவரி 2025இல் ஆரம்பிக்கும்போது தமது கட்சி இந்த அரசின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவரும் என்றார்.

இவற்றுக்கெல்லாம் எந்தப் பதிலையும் கூற மறுத்த கனடியப் பிரதமர், தனது அமைச்சரவைக் கூட்டத்தில் தான் இந்த விடுமுறைக் காலத்தில் ஆலோசனை செய்து புதுவருட ஆரம்பத்தில் தனது முடிவைக் கூறுவதாகத் தெரிவித்தார். அத்துடன் டிசெம்பர் 20ஆம் திகதி தனது அமைச்சரவையைப் புதுப்பித்து 8 புதிய அமைச்சுப் பதவிகளையும், 4 பேருக்கு அமைச்சுப் பதவிகளில் மாற்றமும் கொண்டு வந்தார்.

அனிதா ஆனந்த் தொடர்ந்தும் போக்குவரத்து அமைச்சராக இருப்பதுடன் வர்த்தகத் துறைக்கு அமைச்சராகவும் பதவி ஏற்கிறார்.

ஹரி ஆனந்தசங்கரி தொடர்ந்தும் அரசு முதற்குடிமக்கள் உறவுகள் அமைச்சராக இருப்பதுடன் கனடிய வடக்கு பொருளாதார மேம்பாட்டுத் துறை அமைச்சராகவும் பதவி ஏற்கிறார்.

ஜினெட் பெற்றிபாஸ் (Ginette Petitpas) திறைசேரி தலைவராகப் பொறுப்பேற்கிறார். ஸ்ரீவன் மெக்கினன் (Steven Mackinnon) வேலைவாய்ப்பு, தொழிலாளர் மேம்பாட்டு மற்றும் தொழிலாளர் அமைச்சராகிறார்.

இவர்களைவிட மேலும் எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் புதிதாக அமைச்சுப் பதவிகளை பெறுகின்றனர்.

Vlambaram - January 01, 2025.qxp_Vlambaram-Front 2025-01-02 1:00 PM Page 6



# கவனிக்கப்படாத தமிழர் பிரச்சினை

## – முகிலன் –

இலங்கை ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அண்மையில் இந்தியாவிற்கு மேற்கொண்டிருந்த பயணத்தின்போது, ஒரு கூட்டறிக்கை வெளியிடப்பட்டது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும், இலங்கை ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவிற்கும் இடையில் இடம்பெற்ற இருதரப்பு பேச்சுகளின் பின்னர், வெளியிடப்பட்ட அந்தக் கூட்டறிக்கை தொடர்பாக, இரண்டு பிரதான விடயங்கள் உள்ளன.

ஒன்று - இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை வரைந்துகொள்வதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்கு இணக்கம் காணப்பட்ட விடயம்.

இரண்டாவது - அந்தக் கூட்ட அறிக்கையில் தமிழர் பிரச்சினைக்கான தீர்வு, 13ஆவது திருத்தச் சட்ட அமலாக்கம், மாகாணசபைத் தேர்தல் போன்ற விடயங்களைப்பற்றி எதுவுமே குறிப்பிடப்படாமல் போன விடயம்.

1987ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்திய - இலங்கைத் தலைவர்களுக்கு இடையிலான சந்திப்புகளில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கைகளிலிருந்து - இந்த இரண்டு விடயங்கள் தொடர்பாகவும், வேறுபட்ட ஒன்றாக இப்போதைய கூட்டறிக்கை அமைந்திருக்கிறது.

இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்வதற்கான வரைவு ஒன்றை விரைவாக உருவாக்குவதற்கு இலங்கை அரசாங்கம் இணங்கியிருக்கிறது.

1987ஆம் ஆண்டுக்குப் பின்னர் இத்தகைய ஓர் ஒப்பந்தத்தைச் செய்துகொள்வதுபற்றி தெளிவாக கூட்டறிக்கையில் இணக்கம் தெரிவிக்கப்பட்டிருப்பது இதுவே முதல்முறை என்று இலங்கைக்கான முன்னாள் இந்தியத் தூதுவர் வைகே.சின்ஹா கூறியிருக்கிறார்.

இதனை ஒரு வித்தியாசமான சூழல் என அவர் விவரித்திருக்கிறார். அவரது பார்வையில் இந்த மாற்றம் மிக மிக முக்கியமானதாகத் தென்படுகிறது.

அதேவேளை, இரண்டு நாடுகளின் தலைவர்களின் பேச்சுகளுக்குப் பிறகு வெளியிடப்பட்ட கூட்டறிக்கையை தமிழர் பிரச்சினை தொடர்பாக எந்த விடயமும் குறிப்பிடப்படாமல் தவிர்க்கப்பட்டது ஏமாற்றம் தருகின்ற ஒரு விடயமாகும்.



ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவுடன் நடத்திய கூட்டு ஊடகச் சந்திப்பின்போது, இலங்கை அரசாங்கம் வாக்குறுதி அளித்தபடி தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் என்று எதிர்பார்ப்பதாகவும், மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்தும் என்று நம்புவதாகவும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் இந்திய - இலங்கை கூட்டறிக்கையில் அந்த விடயங்கள் எதுவும் இடம்பெறவில்லை.
பொதுவாக நாடுகளின் தலைவர்களுக்கு இடையில் நடத்தப்படும் பேச்சுகளில் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் தொடர்பாக வெளியிடப்பட்ட கூட்டறிக்கைகள்தான் முக்கியமான ஆவணங்கள்.

அவை ஒப்பந்தங்கள்போல, எப்பொழுதும் மதிப்புக்குரியவை. அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான கடப்பாடுகள் இரண்டு தரப்புகளுக்கும் இருக்கும்.

அந்தவகையில் இப்போது வெளியாகி இருக்கின்ற இந்திய இலங்கை கூட்டறிக்கை தமிழர் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பான விடயங்களில் கடப்பாடுகள் இருப்பதை வெளிப்படுத்தவில்லை.

இலங்கைக்கான கடப்பாடுகளை இந்தியாவோ, இந்தியாவுக்குரிய கடப்பாடுகளை இலங்கையோ வலியுறுத்தியதாக அதில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சந்தர்ப்பம் கிடைக்கின்ற போதெல்லாம், தமிழரை இந்தியா கைவிட்டு விடாது என்று குறிப்பிட்டு வந்திருக்கிறார்.
தமிழரின் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்கு இந்தியா பாடுபடும் என அவர் பலசந்தர்ப்பங்களில் வாக்குறுதி கொடுத்து இருக்கிறார்.

அப்படி இருந்தும், அவர் குறைந்தபட்சம் 13ஆவது திருத்தச் சட்டத்தை அமலாக்குவது, மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதுபற்றிக்கூட, பகிரங்கமாக எந்தவொரு வாக்குறுதியையும் இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொள்ளவில்லை.

இந்த விடயத்தில் யார் தவறிழைத்தது என்ற கேள்வி இருக்கிறது.

ஒருங்கிணைந்த வட-கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சராக இருந்த வரதராஜப்பெருமாள், இந்திய இலங்கை கூட்டறிக்கையில் தமிழர் பிரச்சினை இடம்பெறாமல் போனதற்கு, தமிழ்க் கட்சிகளினதும் தமிழ்நாட்டில் உள்ள கட்சிகளினதும், அழுத்தங்கள் இல்லாமையே காரணம் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த விடயத்தில் இரண்டு விடயங்கள் தாக்கம் செலுத்தி இருக்கின்றன.

ஒன்று - இலங்கையுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்வதற்கான வரைவை தயாரிக்கின்ற அளவிற்கு இந்தியா நெருக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

இது முக்கியமான விடயம். இந்த நெருக்கம் இந்தியாவிற்கு தமிழரை வைத்து கொழும்பைக் கையாளுகின்ற தேவையை இல்லாமல் செய்திருக்கிறது.

இப்போதைக்கு இந்தியா தனது நலன்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நேரடியாகவே கொழும்புடன் தொடர்புகளைப் பேணக்கூடிய நிலையில் இருக்கிறது.

மறைமுகமாக அழுத்தங்களைக் கொடுக்க வேண்டிய தேவை அதற்கு இப்போதைய சூழலில் இல்லை.

அதனால் தமிழரை வைத்து கொழும்புக்கு அழுத்தம் கொடுக்கின்ற தேவை அதற்கு இல்லாமல் போயிருக்கிறது.

இது இந்திய-இலங்கை கூட்டறிக்கையில் தமிழர் பிரச்சினை தொடர்பாகக் கவனம் செலுத்தப்படாமல் போனதற்கு முக்கியமான ஒரு காரணம்.

எந்த ஒரு நாடும் தனது பிரச்சினைகளையும் நலன்களையும் மையப்படுத்தியே முதலாவதாகச் செயல்படும்.

அந்தவகையில் இந்தியா இந்த விடயத்தை கவனத்தில் கொள்ளாமல் போனது ஆச்சரியத்துக்குரிய விடயம் அல்ல.

இரண்டாவதாக, வரதராஜப்பெருமாள் குறிப்பிட்ட விடயம்கூட, கூட்டறிக்கையில் தமிழர் பிரச்சினை கவனிக்கப்படாமல் போனதற்கு ஒரு காரணம் என்பதில் சந்தேகம் இல்லை.

இப்பொழுது தமிழ்த் தேசிய கட்சிகள் பலமிழந்து போய் இருக்கின்றன. அவை ஒரு திரட்சியான நிலையில் இல்லை.

அண்மையில் நடந்த தேர்தலில் தமிழரசுக் கட்சி எட்டு ஆசனங்களையும் தமிழ் காங்கிரஸ் ஓர் ஆசனத்தையும் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி ஓர் ஆசனத்தையுமாக மொத்தம் பத்து ஆசனங்களை மட்டுமே தமிழ்த் தேசியக் கட்சிகளால் பெற்றுக்கொள்ள முடிந்திருக்கிறது.

நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசிய தரப்புகள் இப்பொழுது பலவீனமான நிலையில் இருக்கின்றன.

அவ்வாறு இருந்தாலும்கூட, தமிழரின் அபிலாசைகளையும் நிலைப்பாடுகளையும் புதுடெல்லிக்குத் தொடர்ச்சியாக நினைவுபடுத்திக் கொண்டிருக்கவேண்டிய கடப்பாட்டை தமிழ்க் கட்சிகள் சரியான முறையில் நிறைவேற்றியிருக்கவில்லை.

தமிழ்க் கட்சிகள் அண்மைக்காலத்தில் உள்ளக முரண்பாடுகளைச் சமாளிப்பதில் கவனம் செலுத்துகின்றனவே தவிர, முக்கியமாக முன்னெடுக்க வேண்டிய செயற்பாடுகளில் அவை முழுமையாக ஈடுபடவில்லை.

எட்டு ஆசனங்களைக் கொண்டிருக்கின்ற தமிழரசுக் கட்சியின் சார்பில் இந்தியப் பிரதமருக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டு இருக்க வேண்டும்.

அனுரகுமார திசாநாயக்கவின் பயணத்திற்கு முன்னதாக அந்தக் கடிதம் அவருக்குக் கிடைத்திருந்தால், அது பேச்சு மேசையில் அவர்கள் தரப்புக்கு ஒரு வலுவான ஆதாரமாக இருந்திருக்கும்.

ஆனால் ஒரேயொரு ஆசனத்தை வைத்திருக்கின்ற கஜேந்திரகுமார் பொன்னம்பலம்தான், கடிதத்தை அனுப்பியிருந்தார்.

அந்தக் கடிதம்கூட, இந்திய பிரதமருக்கு உடனடியாகக் கிடைத்ததா என்று சந்தேகிக்கக்கூடிய அளவிற்கு தாமதமாகத்தான் அனுப்பப்பட்டது.

இதேபோல முன்பெல்லாம் இலங்கைத் தமிழர் விவகாரம் தொடர்பாகத் தீர்மானம் எடுக்கின்றபோது, தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகள் தாக்கம் செலுத்தக் கூடிய நிலை இருந்தது.

காங்கிரஸ் மற்றும் பாஜக கூட்டணி ஆட்சிகளின்போது, தமிழகத்தில் அவற்றின் கூட்டணிக் கட்சிகளாக இருந்த திமுக அல்லது அதிமுக போன்ற கட்சிகள் தமிழர் நலன்சார்ந்து புதுடெல்லிக்கு அழுத்தங்களைக் கொடுக்கின்ற நிலை காணப்பட்டது.

ஆனால் இப்பொழுது அப்படியான சூழல் இல்லை. பாரதிய ஜனதாக் கட்சி

தொடர்ச்சி 08ஆம் பக்கம்


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

Vlambaram - January 01, 2025.qxp_Vlambaram-Front 2025-01-02 1:00 PM Page 7



# தமிழரின் வாழ்விடங்களும், கல்வியும்



பேராசிரியர்
மா. சின்னத்தம்பி

**கடந்த இதழ் தொடர்ச்சி...**

## ஏனைய பிரதேசங்களில் தமிழ்க்கல்வி

வடக்கு, கிழக்கு, கொழும்பு, மத்தியமலை நாடு ஆகிய பிரதேசங்களில் தமிழரும், இஸ்லாமியரும் கலந்தும் இணைந்தும் வாழ்கின்றனர். கல்வி கற்கின்றனர்.

ஆனாலும் ஏனைய பகுதிகள் பலவற்றில் இஸ்லாமியத் தமிழர் சிங்கள மக்களது பிரதேசங்களில், சிங்கள மொழி பேசியும் சிங்கள மொழிமூலம் கல்வி கற்று வருவதையும் காணலாம்.

மேற்குக் கரையோரங்களான வேருவளை, கம்பஹா, காலி, மாத்தறை பிரதேசங் களிலும், குருநாகல், புத்தளம், மன்னார் பிரதேசங்களிலும் தமிழ் சிங்களம் ஆகிய இருமொழிகளிலும் புலமை பெற்ற இஸ்லாமியர் கல்வியிலும் அதிக முனைப் பைக் கடந்த இரண்டு தசாப்தங்களில் காணமுடிகிறது. இஸ்லாமியரது அரசியல், பொருளாதார நிலைமை கொழும்பு, பேருவளைப் பகுதியிலிருந்து கண்டி, பாவனல்ல, மட்டக்களப்பு, அம்பாறைப் பகுதிகளுக்கும் பெயர்ந்துள்ளதுபோல் தோன்றுகிறது.

இத்தகைய நகர்வுகளுடன் இணைந்து பிரிக்கமுடியாதவாறு கல்வி நாட்டமும் அதிகரித்துள்ளது. பரவியுள்ள கல்வி நிறுவனங்களும் இதேபோல் விரிவு பெற்றுள்ளன, வளர்ந்துள்ளன.

அமெரிக்க ஆங்கிலக் கல்வி, உலகின் முதல்தர பல்கலைக்கழகங்களில் கற்கும் வேட்கை என்பனவும் குடிபெயர்தலும் இவர்களிடம் சிறப்பாக வளர்கின்றன. இது விரும்பத்தக்க தேசிய கல்வி முன்னேற்றமாகும்.

தலைநகரில் தனியார் கல்வி நிறுவனங் களில் அதிக முதலீடு செய்வதிலும் இஸ்லாமிய தொழில்துறைத் தலைவர்கள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

ஏனைய புவியியல் பிரதேசங்களில் சமூகத்துடன் இணைந்து வாழ்வது, பல மொழி கற்பது, உயர் கல்வி கற்பது போன்ற இணக்கமான சமுதாயப் பண்புகள் இஸ்லாமியத் தமிழரிடம் சிறப்பாக வளர்ச்சி பெற்று வருகின்றன.

இதனால் இளைஞர்களும், பெற்றோரும் கல்வி கற்பதற்கு முன்னுரிமை வழங்கினர். கல்வி கற்பது குலத்தொழிலைக் கற்பதை விட பல அடிப்படைகளில் மேலானது என்ற எண்ணம் வடக்குத் தமிழரிடம் அதிகரித்து வந்துள்ளது. தமிழகத்தில் இருப்பதுபோல் கல்வி நிறுவன அனுமதிக் கொள்கைகளிலும், தொழில் வாய்ப்பிலும் சாதி முன்னுரிமைப்படுத்தப்படுவதே இல்லை. இதனால் கல்வி மிக எளிதான தனிமனித வளர்ச்சிக்குரிய கடவுச்சீட்டாக (Passport) சிறப்புப் பெற்றிருந்ததும் குறிப்பிடத்தக்கது. 1800 - 1900 காலப் பகுதிகளில் நிலவிய சமூகக் கட்டமைப்பும் நம்பிக்கையும் கல்வியைக் குறிப்பாக பலமான உயர் கல்வி அல்லது மேன்மைத் தொழில்களுக்குரிய கல்வியை அனைவரும் பெறத் தடையாயிருந்தது என்பதும் உண்மைதான். 1945இல் கல்வி மந்திரியாயிருந்த C.W.W. கன்னங்கரா வினால் இலவசக் கல்வித்திட்டம் அறிமுக மானதன் பின்பு கல்வி பொதுப்பண்டமாக (Public food) மாறிவிட்டது. இந்தப் புதிய சூழலை மிகவும் சிறப்பாகப் பயன்படுத்திய சமூகமாக வடக்குத் தமிழர் விளங்கினர். உள்ளூர் மட்டத்திலான குடித்தொகை நகர்வுகளும்கூட கல்வியினால் விசைப் படுத்தப்பட்டிருந்தது. பொருள் நாட்டம் போலவே கல்வி நாட்டமும் வடக்குத் தமிழரின் உள்நாட்டு குடிப்பெயர்வுகளைத் தீர்மானித்தே வந்துள்ளது.

## கல்வி கற்றோரும் தலைமையும்

இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்பும் சுதந்திரமடைந்த பின்பும் இலங்கைத் தீவில் தமிழ்ச் சிறுபான்மையினருக்குத் தலைமை தாங்குவதில் கல்வி கற்ற வடக்கு இலங்கைத் தமிழர் முன்னணியில் இருந்தனர். சனநாயக நாடாளுமன்ற அரசியலில் பங்களிப்புச் செய்தவர்களாக பின்வருவோர் குறிப்பிடத்தக்கவர்கள்.




1) சேர். பொன். இராமநாதன் - 15-04-1851 - 30-11-1930 (வழக்கறிஞர்)
2) சேர். பொன். அருணாசலம் - 14-09-1853 - 09-01-1924 (பாரிஸ்டர்)
3) எஸ்.ஜே.வி. செல்வநாயகம் 31-03-1898 - 26-04-1977 (வழக்கறிஞர்)
4) ஜீ.ஜீ. பொன்னம்பலம் 08-11-1901 - 09-02-1977 (வழக்கறிஞர்)
5) எம். திருச்செல்வம் 19-11-1907 - 23-11-1976 (வழக்கறிஞர்)
6) அ. அமிர்தலிங்கம் 26-08-1927 - 13-07-1989 (வழக்கறிஞர்)
7) இரா. சம்பந்தன் 05-02-1933 - 05-07-2024 (வழக்கறிஞர்)
8) சி.வி. விக்னேஸ்வரன் 23-10-1939 - (நீதிபதி)

உயர்கல்வி கற்றோராகவும் தமிழராகவும் வேளாளராகவும் மேட்டுக்குடியினராகவும், செல்வந்தராகவும் உள்ளவர்களே தமிழரது அரசியல் தலைமையைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.

1833இல் கோல்புறூக் (Colebrooke) சீர்திருத்தம் சட்ட நிரூபண சபை உருவாக வழிவகுத்தது. அதில் 15 உறுப்பினர்கள் அங்கம் வகித்தனர்.

உத்தியோகப்பற்றுள்ள ஒன்பது உறுப் பினர்களும் உத்தியோகப்பற்றற்ற ஆறு உறுப்பினர்களும் இடம்பெற்றனர். இதன் படி இலங்கை சட்டசபை மரபில் முதலா வது தமிழர் பிரதிநிதியாக ஆறுமுகம் பிள்ளை குமாரசுவாமி தெரிவானார். அப்போதெல்லாம் தமிழருக்கும் முஸ்லீம் களுக்கும் பிரதிநிதியாக ஒருவரே இருந்தார். முஸ்லீம்களும் தமிழராகவே கருதப்பட்ட அரசியல் பண்பாடு நிலவிய காலம் அது. தொடர்ந்து ஒரு பரம்பரை யைச் சேர்ந்த பலர் தமிழர் அரசியலில் தலைமையை வகித்தனர். இவர்கள்

| | |
|---|---|
| ஆ. குமாரசுவாமி | 1835-1836 |
| எதிர்மன்னசிங்கம் | 1846-1861 |
| முத்துகுமாரசுவாமி | 1861-1879 |
| சேர்.பொன். இராமநாதன் | 1879-1930 |
| சேர்.பொன். குமாரசுவாமி | 1892-1898 |
| பொன். அருணாச்சலம் | 1912-1913 |

இவர்களில் சேர். பொன். இராமநாதன் சுமார் அரை நூற்றாண்டு கால அரசியல் பங்களிப்பைக் கொண்டவர். அதேவேளை இராமநாதனைவிட அதிகம் போற்றப்படு பவர் அவரின் இளைய சகோதரர் சேர். பொன். அருணாச்சலம். ஒரே ஒரு ஆண்டுதான் சட்டசபைப் பிரதிநிதியாக இருந்தார். (என். சரவணன் 2024:79)

சிங்கள சமூகத்தின் வேளாள சாதியின ரான கொவிகம் சாதியினரும் தமிழர் சமூகத்தில் வேளாள சாதியினரும் அரசி யல் தலைமையை 1835இலிருந்து 1990வரை கையகப்படுத்தியிருந்தனர். தமிழ்ச் சமூகத்தில் வேளாள சமூக மேட்டுக்குடியான குமாரசுவாமி குடும்பத் தைப் போலவே சிங்கள சமூகத்தில் கொவிசாம சாதியினராகிய பண்டார நாயக்க மற்றும் ஞாயசேகரா குடும்பங்கள் கோலோச்சி வந்தன.



தமிழர், சிங்களவர் என்ற பேதத்தைவிட சாதிய உணர்வு இரண்டு இனத்தவர் இடையேயும் மேலோங்கியிருந்தது. எழுத்தாளர் என். சரவணனது (2024.80.82) பின்வரும் கூற்றுக்கள் கவனத்துக்குரியன.

1) 1911ஆம் ஆண்டு சட்டசபைக்கான படித்த இலங்கையரைத் தெரிவு செய்வதற் கான தேர்தலில் சேர்.பொன். இராமநா தனை எதிர்த்துப் போட்டியிட்ட மார்கஸ் பெர்னாண்டோவை கராவ (கரையார்) சாதியைச் சேர்ந்தவர் என்பதற்காகவே சிங்கள 'கொவிகம' சமூகத்தைச் சேர்ந்த மேட்டுக்குடியினர் 'கராவ' இனத்தைச் சேர்ந்த ஒருவரை தம் பிரதிநிதியாக ஏற்கத் தயாரில்லாமல் மார்கஸ் பெர்னான்டோவைத் தோற்கடித்து அதை விட உயர் சாதி வேளாளர் சமூகத்தைச் சேர்ந்த பொன். இராமநாதனை வெற்றி பெறச் செய்தனர்.

2) அப்போது சிங்கள தமிழ் முரண் பாடுகள்கூட ஒரு பொருட்டாக இருக்க வில்லை. மாறாக யாழ்.+சைவ+தமிழ்+ வேளாள+படித்த+மேட்டுக்குடி இராமநாதனா அல்லது கொழும்பு+பௌத்த+சிங்கள+ கராவ+படித்த, மேட்டுக்குடி மார்கஸ் பெர்னாண்டோவா எனும்போது அங்கே பொன்னம்பலம் தெரிவாகி சாதி என்பது மட்டுமே மேலதிக தகுதியாக இருந்தது.

படித்தோர் குறிப்பாக அப்புக்காத்து (Advocate) பதவியில் இருந்தவர்களே அரசியலில் பங்கேற்கும் துணிவும், நாட்டமும், செல்வாக்கும் கொண்டு வந்துள்ளனர். இவர்களில் பெரும்பாலா னோர் வடபகுதியைச் சேர்ந்தவர்கள்தான். * சுதந்திரத்தின் முன்பு சேர். பொன். இராமநாதன் சுமார் அரை நூற்றாண்டு கால அரசியல் பங்களிப்பைக் கொண்டவர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1974இல் ஆரம்பிக்கப்பட்டபோது இராமநாதனின் பரமேஸ்வராக் கல்லூரியே பிரதான பல்கலைக்கழக வளாகமாயிருந்தது. அவரது இராமநாதன் மகளிர் கல்லூரியின் ஒரு பகுதியிலேயே பல்கலைக்கழக அழகியல் கல்வித்துறை இயங்கியது என்ப தையும் நினைவிற்கொள்ள வேண்டும்.

சுதந்திரத்தின் பின் தமிழர் அரசியலில் தலைமை வகித்த எஸ்.ஜே.வி. செல்வ நாயகமும் புகழ்பெற்ற அப்புக்காத்துத் தான். 1944 - 1977வரை தமிழரின் மதிப்பு மிக்க அரசியல் தலைவராக விளங்கியவர். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியைத் தொடங்கி வழிநடத்தியவராவார்.



இலங்கை வரலாற்றில் தனது தனி ஆற்றல் மூலம் அப்புக்காத்து தொழிலில் உச்சத்தில் வாழ்ந்தவர் ஜீ.ஜீ. பொன்னம் பலம் ஆவார். அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் (ACTC) கட்சியைத் தமிழரைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக தாபித்தார். சேர். பொன். இராமநாதன் மறைவுக்குப் பின் 1977இல் அவர் காலமாகும்வரை முக்கிய தலைவராக விளங்கியவர். 1948இல் சுதந்திர இலங்கையின் முதலா வது மந்திரி சபையில் கைத்தொழில், கைத்தொழில் ஆராய்ச்சி மற்றும் மீன்பிடி அமைச்சராகப் பதவி வகித்தவர்.

அப்புக்காத்து அரசியல் தலைமையும் பங்களிப்பும் தமிழர் அரசியலில் இன்று வரை தொடர்கிறது. திருச்செல்வம், அமிர்தலிங்கம், சம்பந்தன், விக்னேஸ் வரன், ரவிராஜ், சுமந்திரன் என இப்பட்டியல் நீண்டு செல்கிறது.

கல்வியின் பேராற்றல் இலங்கையின் வடபகுதியில் எந்தளவு வலிமை பெற்று இயங்குகின்றது என்பதற்கான ஓர் அடையாளம் இதுவாகும்.

# நாமும் நமது இல்லமும் 669

## ஆதன வியாபாரமும், வட்டி வீதமும்



ராஜா மகேந்திரன்
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969




'ஆதன வியாபாரம்' புதுவருடத்தில் (2025) எவ்வாறு இருக்கும்? ஏற்கனவே நாம் எதிர் பார்த்தது போலவே 2024ஆம் ஆண்டு வட்டி வீதத்தில் இறக்கம் ஏற்பட்டது.

| கனடிய வங்கி வட்டி வீதம் | |
|---|---|
| 2023 டிசெம்பர் 31 | 5% |
| 2024 ஜுன் 06 | 4.75% |
| 2024 ஜுலை 24 | 4.25% |
| 2024 செப்ரெம்பர் 04 | 4.25% |
| 2024 ஒக்ரோபர் 23 | 3.75% |
| 2024 டிசெம்பர் 11 | 3.25% |

2021 மற்றும் 2022ஆம் ஆண்டின் ஆரம்பத்திலும் ஆதன வியாபாரம் முழு மூச்சுடன் இயங்கியது. கனடிய மக்கள் ஆதனம் கொள்வனவு செய்வதில் பெரும் நெருக்கடியை அடைந்தனர். கனடிய அரசிற்கு பலவழிகளிலும் இருந்து நெருக்கடிகள் தொடங்கியது. பணவீக்கமும் அதிகரித்தே சென்றது.

2021ஆம் ஆண்டில் ரொறொன்ரோ ஆதன சபையில் கணிப்பில் முதல் தடவையாக ஆதனத்தின் சராசரி விலை $1,095,475 ஆகவும் அந்த ஆண்டில் 121,712 ஆதனங்கள் கைமாறின. இதே நிலைமை 2022ஆம் ஆண்டின் ஆரம்ப மாதங்களிலும் நிகழ்ந்தது.

மார்ச் 2021இலிருந்து கனடிய மத்திய வங்கியின் வட்டி வீதத்தில் பெப்ரவரி 2022 வரை எதுவித மாற்றமும் இல்லாமல் 0.25% என்ற சரித்திர மிகக்குறைந்த வட்டி வீதம் கனடியர்களை ஆதனப்பக்கமே வைத்திருந்தது. பலர் இரண்டு, மூன்று என ஆதனத்தைக் கொள்வனவு செய்தனர்.

இதுவே ஆதன விலை அதிகரிப்பிற்கும், ஆதன வியாபாரத்திற்கும் காரணமாகக் காணப்பட்டது. பணவீக்கமும் அதிகரித்தது. இதனைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கு மார்ச் 02, 2022இல் முதல் தடவையாக 0.25% அதிகரிப்பை கனடிய வங்கியின் ஆளுநர் திரு. ரிம் மக்கெலம் ஏற்படுத்தினார்.

இதனைத் தொடர்ந்து பத்து (10) தடவைகளில் கனடிய மத்திய வங்கியின் வட்டி வீதம் அதிகரிக்கப்பட்டு 0.25%இலிருந்து 5%ஆக உயர்த்தப்பட்டது. இறுதியான வட்டிவீத அதிகரிப்பு ஜுலை 12, 2023இல் ஏற்படுத்தப்பட்டது.

வட்டி வீதத்தின் அதிகரிப்பு ஆதன வியாபாரத்தை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தது. ஆனால், இந்தத் தொடர்ச்சியான அதிகரிப்பால் கனடியர்கள் மிகப்பெரிய நெருக்குதல்களிற்கு உள்ளாகினர். பலர் தமது ஆதனத்திற்குரிய அடமானக் கடன் செலுத்துவதில் பெரிய சிக்கல்களையும், அவலங்களையும் எதிர்நோக்கினர்.

ஆதன வியாபாரம் தொடர்ச்சியாக மோசமடைந்து வந்ததால் நான்கு வருடங்களில் (4) முதல் தடவை 2024ஆம் ஆண்டில் ஜுன் 6ஆம் திகதி 0.25% வட்டி வீத இறக்கம் ஏற்படுத்தப்பட்டது. இதனால் 5%ஆனது 4.75%ஆகக் குறைந்துள்ளது. இதனைத் தொடர்ந்து நான்கு தடவை மொத்தமாக 5 தடவை 2024 வட்டி வீதம் இறக்கப்பட்டது.

இதனால் 2024 டிசெம்பர் 31இல் கனடிய வட்டிவீதம் 3.25%ஆகவும் கனடிய முதன்மை வட்டி வீதம் 5.45%ஆகவும் காணப்படுகின்றது.

குறிப்பாக 2024ஆம் ஆண்டில் வட்டிவீதம் கீழ்நோக்கியே வந்துள்ளது.

இதன் தொடர்ச்சியாக 2024ஆம் ஆண்டில் சராசரி ஆதன விலையும், வியாபாரமும் கட்டுப்பாட்டிற்குள் வந்துள்ளது. கீழ் நோக்கிய இறக்கம் நிற்பாட்டப்பட்டுள்ளது.

தொடர்ச்சியான வட்டிவீத இறக்கம் 2025 இலும் எதிர்பார்க்கலாம். ஏற்கனவே 5 வருட ஆதன வட்டிவீதம் 4%இற்கு குறைவாகப் பெறக்கூடியதாக உள்ளது. மத்திய அரசும் முதல்தடவை ஆதனம் உரிமை கொள்ள சில வசதிகளையும் செய்துள்ளது.

2025ஆம் ஆண்டு ஆதன வியாபாரத்தில் 2023, 2024 போலல்லாது நிச்சயமாக வித்தியாசமான ஆண்டாக எதிர்பார்க்கலாம்.

| Toronto Regional Real Estate Board Historic Annual Statistics | | |
|---|---|---|
| Year | Salaes | Average Price |
| 2011 | 89,110 | $464,989 |
| 2012 | 85,488 | $497,073 |
| 2013 | 87,047 | $522,951 |
| 2014 | 92,776 | $566,611 |
| 2015 | 101,213 | $622,116 |
| 2016 | 113,040 | $729,824 |
| 2017 | 92,340 | $822,510 |
| 2018 | 78,017 | $787,842 |
| 2019 | 87,747 | $819,153 |
| 2020 | 95,066 | $929,636 |
| 2021 | 121,712 | $1,095,475 |
| 2022 | 75,045 | $1,190,742 |
| 2023 | 65,817 | $1,120,300 |
| 2024 | 67,000+(F) | $1,120,000 +(F) |

இதுவரை 2021ஆம் ஆண்டில் ஆதன வியாபாரத்தில் அதிகூடிய வியாபாரமும், விலையுமுள்ள ஆண்டாக உள்ளது. 2024, புதிய மாற்றத்தின் மாறுதலான ஆண்டாக இருக்கும்.

குறிப்பு: டிசெம்பர் 15, 2023 விளம்பர இதழின் ஆக்கம் 644ஐ பக்கம் 6இல் உள்ள "நாமும் நமது இல்லமும்" ஆக்கத்தையும் வாசிக்கவும்.

வாடகைக்கார் தொழில்துறைக்கு ஆதரவளிக்கும் வகையில் வாடகைக் கார் கட்டண விகிதம் மற்றும் உரிமம் வழங்கல் கட்டணத்தில் பிராம்ப்டன் நகர நிர்வாகம் மாற்றங்கள் செய்துள்ளது

பிராம்ப்டன், ON–உள்ளூர் வாடகைக்கார் தொழிலுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டபடி, மொபைல் உரிமம் வழங்கல் உபசட்டம் 67-2014இல் முக்கிய திருத்தங்களை பிராம்ப்டன் நகர நிர்வாகம் அறமுகப் படுத்துகிறது. ஜனவரி 01, 2025 முதல், இயக்கச் செலவுகளை சிறப்பாகப் பிரதிபலிக்கும் வகையில் வாடகைக்கார் கட்டண விகிதங்களை அதிகரிக்கும் அதேநேரத்தில், தொழில்துறைக்கு நிதி ரீதியான நிவாரணம் வழங்க உரிமக் கட்டணமும் குறைக்கப்படும்.

உப சட்டத்தில் முக்கிய திருத்தங்கள்
* **விரிவாக்கப்பட்ட தரகர் வைப்புநிதி காலம்:** வாடகைக்கார் சவாரிக்கான தரகு வைப்புத் தொகையாக $20.00 என்பது ஒரு நாளின் வேலை நேரத்தில் மட்டுமே என்பதற்குப் பதிலாக இப்போது நாளின் எந்தச் சமயத்திலும் கோரப்படலாம்.
* **வாடகைக்கார் கட்டண விகிதம் அதிகரிப்பு:** வாடகைக்கார்களுக்கான ஆரம்பக்கட்டணம், ஆரம்பதூரம் 125 மீற்றர்களுக்கு 9.5 சதவீதம் உயர்வதன்மூலம் $4.25இலிருந்து $4.75ஆக அதிகரிக்கும் மற்றும் ஒவ்வொரு அடுத்தடுத்த 125 மீற்றர்களுக்கும் $0.25 அதிகரிக்கும்.
* **வருடாந்திர உரிமம் வழங்கல் கட்டணத்தில் $100 குறைப்பு:** வாடகைக்கார் உரிமையாளர்கள் மற்றும் ஓட்டுனர்களுக்கு வருடாந்திர உரிமக் கட்டணம் $518 இலிருந்து $418ஆகக் குறைக்கப்படும்.

வாடகைக்கார் கட்டண விகிதம் என்பது ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட வாடகைக் கட்டணமாகும். இது ஆரம்பக் கட்டணங்கள் உள்ளிட்ட வாடகைக்கார் சேவைகள், கிலோ மீற்றருக்கான கட்டணங்கள், காத்திருப்பு நேரக் கட்டணம் மற்றும் இவை தொடர்பான செலவுகள் ஆகியவற்றைத் தீர்மானிக்கிறது. இவை மாறி வரும் பொருளாதார நிலைமைகள் மற்றும் இயக்க செலவுகளைச் சரிக்கட்டும் வகையில் அவ்வப்போது சீரமைக்கப்படுகின்றன. 2024ஆம் ஆண்டில் 282 எண்ணிக்கையிலான உரிமம் வழங்கல் பட்டைகள் பிராம்ப்டன் நகர நிர்வாகத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

Bungalow houseஇல் அறை வாடகைக்கு உண்டு. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.271.1727**

## BASEMENT FOR RENT

**CHURCH & ROSSLAND(AJAX)**

2 Bedrooms bsmt for rent. Sep. entrance, sep. laundry & 1 par king. Close to bus stop & all facilities. Avail. Jan. 07, 2025.

**416.609.1611/ 416.771.0550**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & MCNICOLL**

2 Bedrooms bsmt for rent. Sep. entrance, 1 parking. Close to all facilities. Couple /Small family preferred. Avail. immediately.

**416.613.1792 / 437.260.6478**

## ROOM FOR RENT

**NEILSON &FINCH**

2 Bedrooms in Upstairs & 2 Bedrooms in a bsmt for rent. Shared washroom & kitchen. Male only. Close to TTC, Centennial College & grocery shopping. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.837.1860**

## ROOM FOR RENT

**WESTNEY & TAUNTON**

1 Bedrooms with attached wash room for rent in a bsmt. Shared kitchen. Female only. Close to all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.846.8394**

## BASEMENT/ROOM FOR RENT

**MORNINGSIDE & OLD FINCH**

2 Bedrooms walkout bsmt for rent. Sep. entrance, sep. laundry, Parking & Big hall. Rooms for rent in 2nd floor. 2 Rooms with attached washroom. Close to School, bus stop, Eraa super market & all facilities. Avail.immediately.

**416.662.1418/289.244.8555**

## ROOM FOR RENT

**MARKHAM & LAWRENCE**

1 Bedroom for rent in a bsmt. Sep. washroom & 1 parking. Female preferred. Close to TTC, Mall & all facilities Avail. immediately.

**416.930.5307 /416.829.0875**

## ROOM FOR RENT

**KENNEDY & MCNICOLL**

1 Bedroom for rent in a 2 bedrooms condo. Male preferred. Close to TTC & all facilities. Avail. immediately.

Contact: Kumar **:437.993.0192**

## BASEMENT FOR RENT

**KENNEDY & 14TH AVENUE - MARKHAM -** 2 Bedrooms brand new bsmt for rent. Sep. entrance & 1 parking.

**NEILSON & FINCH - SCARBOROUGH -** 3 Bedrooms bsmt for rent. Sep. entrance & 1 parking. Close to public Transit & Hwy401& etc.

**SALEM & ROSSLAND - AJAX -** 2 Bedrooms bsmt for rent. Sep. entrance & 1 parking. Close to public Transit & HWY 401& HWY 412.

**Please call Rajah - 416.917.0557**

## ROOM FOR RENT

**MARKHAM & DENISON**

2 Rooms available in main floor. Close to all facilities. Avail. immediately.

**647.858.2290 /647.534.9897**

## BASEMENT & ROOM FOR RENT

**MCCOWAN & BRIMORTON**

3 Bedrooms bsmt for rent. தனி அறைகளாகவும் வழங்கப்படும். Close to Scar. town center, bus stop & all other facilities. Family /Ladies only. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.844.1716**

## HOUSE & BASEMENT FOR RENT

**MARKHAM & DENISON**

3 Bedrooms house & 2 Bed rooms bsmt for rent. Close to Costco & all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு:**647.764.5246**

## HOUSE FOR RENT

**ELLESMERE & ORTON PARK**

4 Bedrooms house & 2 bedroom bsmt full house for rent. 3 full wash room. 7 Parking. Close to bus,school & all facilities. Seniors preferred. Food, PSW & Nurse facility available.

தொடர்புகளுக்கு: **416.206.5080**

## HOUSE FOR RENT

**MCCOWAN & BRIMORTON**

3 Bedrooms house for rent. 2 parking. Close to Scar. centre, Mall & all facilities. 2 Min. walk to bus stop. Avail. immediately.

தொடர்புகளுக்கு:**647.856.0250**

## PICKUP & DROP OFF

Do you need pickup and drop-off for holiday party or Airport. பாதுகாப்பான, நேரம் தவறாத நியாய கட்டண வாகன சேவை Safe, affordable and punctual service.

**Contact : 647.205.8317**

## HOUSE / BASEMENT FOR RENT

**MARKHAM & 16TH AVENUE**

4 Bedrooms house for rent. 2+1 washrooms. 1 bedroom bsmt for rent. 3 car parking. Close to South Asiyan, Go station, No Frills & food Basics. Avail. immediately.

தொடர்புகளுக்கு:**647.405.1962**

## HOUSE FOR RENT

**WHITES & TAUNTON**

3 Bedrooms & 2.5 washrooms house for rent. 5 Min. walk to bus stop. School bus facilities available. Avail. immediately.

**647.535.9630/416.887.8905**

## HOUSE FOR RENT

**MARKHAM & SHEPPARD**

2 Bedrooms & 2 washrooms Two-story Townhouse for rent. Parking, laundry. Close to all major supermarkets, 24Hr Bus with 1 minute walk. No pet or smoke.

தொடர்புகளுக்கு: **416.477.8746**

## காணி விற்பனை

யாழ்ப்பாணம் நாவற்குழி A9 வீதியிலிருந்து 100m வீதியோரத்தில் (Business Place), 7 பரப்பு உறுதிக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:**416.271.1727**

## HOUSE/BASEMENT FOR RENT

**MARKHAM & DENISON**

4 Bedrooms house for rent.

**STAINES&MORNINGSIDE**

2 Bedroom walkout basement for rent. 3 Bedrooms house for rent.

**Contact: 647.686.8590**

## HOUSE FOR RENT

**SCAR. GOLF CLUB & BRIMORTON**

3 Bedrooms furnished bangalow house for rent. 1 washroom & 1 parking. Close to bus stop & all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.276.9503**

## CONDO. FOR RENT

**BRIMLEY & ELLESMERE**

2 Bedrooms & 2 full washrooms condo. for rent. 1 parking. Close to Scar. town centre & all facili ties. Avail. January 23, 2025.

**613.769.3432/416.454.4149**

## காணி விற்பனை

யாழ்ப்பாணம் சுன்னாகத்திற்கும் ஏழாலைக்கும் இடையில் 10 பரப்பு உறுதிக்காணி பழைய வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. 20 நிமிடத்தில் பலாலி விமான நிலையம். வீதியோரத்தில் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:**905.904.9616**

## CONDO. FOR RENT

**SIMCOE & WINCHESTER**

**2545 SIMCOE ST. - OSHAWA**

2 Bedrooms & 2 washrooms condo. for rent. 1 parking. Close to all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.846.8394**

## HOUSE FOR RENT

**MARKHAM & HWY 7**

3 Bedrooms bungalow house for rent. Close to all facilities. Avail. February 01, 2025.

தொடர்புகளுக்கு:**647.883.1054**

## MOVING & DELIVERY

#1 ASX Transport Safety Mover and Delivery **24/7**

- Home moving
- Office moving
- Apartment moving
- Pick up and delivery
- Residential & Industrial Garbage Removal
- Storage Arrangements
- Piano Movers & etc.



**Small Moving $75**

தொடர்புகளுக்கு: **Siva - 416.939.4381**

## CONDO. FOR RENT

**NEILSON & MCLEVIN**

480 Mclevin Ave. - 1 Bedroom & 1 washrooms condo. for rent. 1 parking included. Close to Malvern mall & all facilities. Avail. January 05, 2025.

**Pls. Contact: 416.560.0327**

## HOUSE FOR RENT

**MARKHAM & DENISON**

4 Bedrooms & 4 washrooms less than 3 years old, whole house for rent. Rent - $3,300. Close to Costco. Avail. immediately.

தொடர்புகளுக்கு:**416.275.5788**

## HOUSE, CONDO. & BASEMENT FOR RENT

**BROCK & TAUNTON (PICKERING) -** 4 Bedrooms & 4 washrooms brand new house for rent.

**PHARMACY & SHEPPARD (SCARBOROUGH)-** 2 Bedrooms & 2 washrooms brand new condo. for rent.

**SCAR. GOLF CLUB & ELLESMERE -** 4 Bedrooms & 2 washrooms brand new basement for rent.

**Please call or text - 647.269.0193**

## UPCOMING CONDO. FOR SALE

**MARKHAM & BRIMORTON**

புதிதாக அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் 3 Bedrooms & 2 Bedrooms Luxury Condominium (2) (FOURME) விற்பனைக்கு உண்டு. Closing: December, 2025.

மேலதிக தொடர்புகளுக்கு **: 905.904.9616**

## BASEMENT/ROOM FOR RENT

**MARKHAM & SHEPPARD**

3 Bedrooms & 2 washrooms bsmt for rent. Rent $2,200 +utility.

**MARKHAM & DENISON**

1 Very large bedroom Rent $1,400. 2 Male preferred. Rooms available $500 & $600. No alcohol, no pets & no smoking. Avail.immediately.

**647.507.2148/647.864.1051**

## CASHIER (காசாளர்) WANTED

Markham பகுதியிலுள்ள தமிழ் Restaurant ஒன்றிற்கு காசாளர்கள் (Cashier) (4பேர்) தேவை. முன் அனுபவமுள்ள இருபாலாரும் தொடர்புகொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: **Raj - 416.999.3878**

## WORKER தேவை

**Construction**

வேலைக்கு ஆட்கள் தேவை.
**Location: MARKHAM & PROGRESS**
அனுபவம் தேவை

தொடர்புகளுக்கு: **647.514.0431**

## FUNDING $ AVAILABLE

கடன் வசதி உண்டு

Funding available for basement $80,000

தொடர்புகளுக்கு: **647.514.0431**

## CONDO. FOR RENT

## VICTORIA ST. & BROCK WHITBY

1606-1614 Charles Street - 2 Bedroom & 1 washroom condo. for rent. 1 parking included. 9 Min. walk from Whitby GO Station. Avail. immediately.



Please Contact: **416.564.9708**

## பலகாரத் தேவைகளுக்கு

ரவை லட்டு, கேசரி, தொதல், அரியதரம், பயத்தம் பலகாரம் போன்ற பலகார வகைத் தேவைகளுக்கு

அழையுங்கள்: **647.765.2250**

## நியூ ரங்கனாஸ் நகைமாடம்

* திருமணத்திற்கான தாலிக்கொடி, மற்றும் அனைத்து நகைகளையும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள
* தங்கநகை அடகுச் சேவை.
* பழைய தங்கநகைகள் விற்பனை

**CASH FOR GOL**



மேலதிக விபரங்களுக்கு
**647.702.2159**
நியூ ரங்கனாஸ் நகைமாடம்
மார்க்கம் & ஸ்ரீல்ஸ்

## JOB VACANCY

### OFFICE ADMINISTRATOR /RECRUITERS

**LOCATION - SCARBOROUGH/BRAMPTON** (Full time / Part time)
**Requirement - University Degree in Canada with Institutional experience & excellent communication skills in English & Tamil**
If you're interested, please contact for more details.
**416.918.9848 /416.857.7603**

## BUSINESS FOR SALE - வியாபாரம் விற்பனை

**நாதஸ்வர தவில் இசை சர்வதேச இசை அமைப்பு**
Nathaswara Thavil Music of Global Inc. என்ற அமைப்பு விற்பனைக்கு உண்டு. இவ் அமைப்பின்மூலம் விசாக்களைப் பெற்று வெளிநாட்டுக் கலைஞர்களை கனடாவிற்கு அழைக்க முடியும். Embassyஇல் நல்ல வரவேற்பு உள்ளது. மேலும் விபரங்களை அறிய
ஆ.முருகதாஸ்: **416.420.1309**

## சமையல் வேலைக்கு ஆள் தேவை

Markham பகுதியிலுள்ள தமிழ் Restaurant ஒன்றிற்கு இலங்கை, இந்திய உணவுகளைத் தயாரிப்பதில் அனுபவமுள்ள சமையல் ஆட்கள் தேவை. முன் அனுபவமுள்ள இருபாலாரும் தொடர்புகொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: **Raj - 416.999.3878**

## GREAT DEAL ON USED CARS

**Over 150 Used Vehicles in inventory**
**We Arrange Finance**
**Everyone Approved**

- New comers
- Students
- Bankrupcy
- Cash income
- **TRADE IN OFFER**
  We buy your car for top dollar
- We refinance your car



**SIVA : 647.838.7843**

## மது போதைத் தடுப்புத் திட்டம்

**மது போதையிலிருந்து விடுபட முடியவில்லையா?**




**வசந்தம் 18 வயதுக்கு மேற்பட்ட இருவகை பாதிப்புள்ளவர்களுக்கான சேவையை வழங்குகின்றது:**

- மது போதைக்கு அடிமையானவர்கள்
- மது போதை அடிமையுடன் கூடிய உள நோயாளர்கள்

**நீங்கள் யார் என்பதை அடிமைப்படுதல் வரையறுப்பதில்லை**

camh FUNDED BY Health Canada

2660 - Eglinton Ave E, Suite L08
Scarborough, ON.
M1K 2S3
416-847-4172
info@vasantham.ca

Property Management
Unit #210 – 80 Corporate Dr, Scarborough, ON, M1H 3G5

**Available for Rent**
*Oshawa* -Hwy 2 / Trulls Rd - Bungalow (5Brm + 2Bath) [$3475/ month]
*Whitby* -Des Newman / Twin Streams -Full ( 3 Brm + 3 Bath + Parking) ($3500/month)
Oshawa - Upper floor Bond/Mcmillan ( 3 Brm + 1 Bath ) Separate entry and laundry ( $2950/month)
*Scarborough* - Morningside/Sheppard ( 2 Brm + 1 Bath ) ($1850/ month)
Niagara Falls - Lundy's Lane / Dorchester (4BR 3Bath $3200)

**Available for Rent**
*Oshawa* - Harmony/ Olive - Basement (1Brm + 1 Bath + 1 parking) [$1450.00/month including utilities]
*Scarborough* - Mccowan & Lawrence-Basement (2Brm + 1Bath) [$2,100/month)
*Whitby* - Country Lane & Southwell Ave Basement (2Brm + 1Bath) [$1600/month]
*Mississauga*-Confederation / Burnhamthorpe - Condo (1Brm + 1Bath) [$2300/month]
Scarborough - Morningside/Lawrence main floor(3 Bm + 1 Bath) ($2800)

**BUY / SELL/ LEASE / INVEST**
- வீடு ஒன்றை வாங்கி வாடகைக்கு விட்டு வருமானம் தேட விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுக்கும்போது சரியானவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது என்ற குழப்பம் அல்லது பயம் இருக்கிறதா?
- இப்போது வசித்துவரும் வீட்டில் இருந்தே கடன் பெற்று இன்னுமொரு வீட்டை எப்படித் தெரிவு செய்து வாங்குவது என்று அறிய விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுத்திருக்கும் வீட்டின் வாடகைப் பிரச்சனைகளைக் கையாளத் தகுந்த நிறுவனத்தைத் தேடுகிறீர்களா?

Real Estate & Property Management துறையில் 36 வருடங்கள் அனுபவமுள்ளவரைத் தொடர்பு கொள்ளலாம்.
கரு கந்தையா - 416.616.7278 Watson Property Management - 416.284.9999
We are managing Condos, Houses, Apartments in the area of
Toronto, Markham, Ajax, Whitby, Oshawa, Clarington, Brampton, Hamilton, Beaverton, Trenton, and Kingston.



இலங்கையில் (Sri Lanka)
வீடு, காணி, வியாபார நிலையங்கள்
வாங்க விற்க தொடர்புகளுக்கு
Lanka Global Real Estate
170 Columbuthurai Rd
Jaffna
Email: sales@langaglobal.lk
Phone: 94-77-666-5513
கரு கந்தையா [கனடா] Phone: 1-416-616-7278
அரன் கந்தையா [அவுஸ்திரோலியா] Phone: 61-418-553-6613


# கங்குவா – திரைவிமர்சனம்



ஆரணி ஞானநாயகன்

தமிழில் அதிக செலவுடன் எடுக்கப்பட்ட படங்களில் மூன்றாமிடம் பெற்ற படம் கங்குவா. நொவெம்பர் 2024இல் வெளியான இப்படத்தில் சூர்யா கதாநாயகனாக நடித்துள்ளார்.

இப்படத்தின் கதை 1070ஆம் ஆண்டில் தொடங்குகிறது. இந்தியாவிற்கு அருகிலுள்ள பெருமாச்சி, அரத்தி, வெண்காடு, மண்டையாறு மற்றும் முக்காடு என்ற ஐந்து தீவுகளில் இக்கதை இடம் பெறுகிறது.

மலையைச் சார்ந்த பெருமாச்சி தீவின் மக்கள் நெருப்பை வணங்குவர். அவர்களின் தலைவனின் மகன் கங்குவன் (சூர்யா) ஆவார். கங்கு என்றால் 'தீப்பொறி' அல்லது 'பருந்து' என்ற பொருள்களை தமிழில் கொண்டுள்ளது. உரோமர்களின் படை பெருமாச்சியைக் கைப்பற்ற சதி செய்கிறது.
பண்டைய கதை ஒரு பக்கமிருக்க, மறுபக்கத்தில் சிலகாட்சிகள் 2024இல் நடைபெறுகின்றன. இதில் Francis (சூர்யா) என்பவர் காவல்துறைக்காக மறைந்து வாழும் பெரும் குற்றவாளிகளைப் பணத்திற்காக பிடித்துக்கொடுக்கும் வேலைசெய்பவர்.

உரோமர்கள் பெருமாச்சியைக் கைப்பற்றினார்களா? கங்குவனிற்கும் Francis இற்கும் இடையிலுள்ள தொடர்பு என்ன? என்ற கேள்விகளுக்குப் பதிலை இப்படத்தைப் பார்த்து அறியுங்கள்.



மிகுந்த எதிர்பார்ப்புடனும், பெரும் செலவுடனும், பல மொழிகளிலும் இப்படம் தயாரிக்கப்பட்டது. இந்தப் படத்தில் வரும் கணினித் தயாரிப்பு காட்சிகளின் (CGI) பிரபலத்தால் இதை உணர முடிகிறது. அத்தோடு பண்டைய களத்தில் ஐந்து தீவுகளின் கற்பனைக் கலாசாரம், 2024இல் வரும் விஞ்ஞான தொழில்நுட்ப கற்பனையும் தமிழ் படங்களுக்குப் புதிய விதத்தில் அமைந்துள்ளன. இவ்வாறு பிரம்மாண்ட காட்சிகளில் இயக்குநர் கொண்ட கவனம் நன்றாகத் தெரிகிறது. மேற்கூறிய கதையின் சிறப்புகளிலும் கவனம் செலுத்தி இருந்தால் படம் இன்னும் நன்றாக இருந்திருக்கும். பல சண்டைக்காட்சிகளைக் காட்ட விரும்பியதால் முக்கிய காட்சிகள் மிக வேகமாகச் செல்வதுபோலத் தெரிகிறது. சண்டைக்காட்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டதால், சராசரியான பார்வையாளர்களுக்கு படத்தில் சண்டைக் காட்சிகள் அதிகமாக இருப்பதுபோல் தெரியலாம்.

2024இல் நடைபெறும் காட்சிகளில் பல தேவையில்லாமல் மிகைப்படுத்தப்பட்டது போல் தோன்றுகிறது. குறிப்பாக Francis இன் நண்பர்களும், காதலியும் வரும்



காட்சிகளில் வரும் நகைச்சுவைப் படத்தின் தெளிவையும், தரத்தையும் குறைக்கின்றன.

ஆனால், கங்குவனின் கதை குறிப்பாக அவருக்கும் அவரது எதிரியின் மகனுக்கும் இடையிலுள்ள உறவு பார்க்க நன்றாக இருந்தது. படத்தின் கவனம் இதிலிருந்தால் மிகவும் சிறப்பாக இருந்திருக்கும்.

அண்மையில் வந்த பல படங்களைப் போல இப்படமும் இன்னொரு படத்தில் தொடர வேண்டிய கதை அமைப்பைக் கொண்டுள்ளது. இது கதையின் தெளிவின்மைக்கு இன்னொரு காரணமாக இருக்கலாம்.



தொழில்நுட்பம் மற்றும் கதையில் புதிய முயற்சியைப் பார்க்க விரும்புவோர் இப்படத்தைப் பார்க்கலாம்.



நான் இளைஞனாக இருந்தபோது எல்லாம் தெரியுமென நினைத்தேன். கொஞ்சம் வயதான போது கொஞ்சம்தான் தெரியும் என உணர்ந்தேன். முதிர்ச்சி அடைந்தபோதுதான் தெரிந்தது எனக்கு எதுவும் தெரியாது என்று

சாக்ரடீஸ்

Vlambaram - January 01, 2025.qxp_Vlambaram-Front 2025-01-02 1:00 PM Page 18



# அறிமுகம் 'உள்ளத்தின் குரல்'

Words of Peace
பிறேம் ராவத் பற்றி மேலும் அறிந்துகொள்ள:
www.timelesstoday.com
www.premrawat.com

பல வருட காலமாக தன்னைத்தானே அறிந்து கொள்வதற்காகப் பயணித்துக் கொண்டிருக்கும் பலரை நான் சந்தித்தும், உரையாடியும் உள்ளேன். சிலர் பரிபூரண நிறைவைக் கண்டுகொள்வதற்காகத் தம் வாழ்வை அர்ப்பணித்துள்ளதுடன், அதற் காக உலகம் முழுவதும் உள்ள கருத்து களையும் வழிமுறைகளையும் தொடர்ந்து ஆராய்ந்து வருகின்றனர். சிலர் தங்களைத் தாங்களே மேலும் சிறப்பாகப் புரிந்து கொள்வதற்கும், மேன்மையானதொரு மனிதனாவதற்கும் விரும்புகின்றனர் அல்லது அவர்கள் தங்களின் வாழ்க்கையில் நிறைவையும், மகிழ்ச்சியையும் மேலும் ஆழமாக அனுபவிக்க விரும்புகின்றனர்.

உங்கள் பயணத்தின் ஒரு பகுதியை என்னுடன் மேற்கொள்ளும்போது, நாம் செல்லும் இடமானது உங்களுக்கு ஆச்சரியத்தைத் தரக்கூடும். கோட்பாடுகள், நம்பிக்கைகள் அனைத்தையும் விடுத்து தனித்துவமான ஞானத்தை நோக்கி நகர் கிறோம். தினந்தோறும் நிகழும் கவனச் சிதறல்களிலிருந்து விடுபட, உங்கள் உள்ளேயே செல்லப் போகிறோம். தெளிவு, நிறைவு மற்றும் மகிழ்ச்சியை நாம் உண்மையாகவே அனுபவிக்கக்கூடிய ஓர் இடத்திற்கு, நிறைவான அமைதிதரும் இடத்துக்கு நமது பாதையானது மனதை நிலைப்படுத்தி, உள்ளத்தை நிறைவு செய்து நம்மை அமைதி நிறைந்த நிலைக்கு அழைத்துச் செல்லும். நீங்கள் யாராக இருப்பினும், அமைதி உங்கள் உள்ளே இருக்கிறது. நம் ஞானம் அதை அனுபவிக்க உங்களுக்கு உதவுகிறது. இந்தப் புத்தகமானது அது எவ்வாறு உதவும் என்பதை உங்களுக்கு விவரிக்கும்.

தன்னைத்தானே புரிந்துகொள்ளல் என்ற தலைப்பு தொடர்பாக அறிவுசார்ந்த பல விதமான கருத்துகள் இவ்வுலகில் அதிகள வில் இருப்பதைக் காண்கிறேன். ஆனால், தன்னை அறிவதன் நோக்கம் மிகவும் எளிமையானது. நம்முள் இருக்கும் பேரமைதியுடன் ஒன்றியிருப்பதால், நமக்குத் தெளிவு, அளவிடமுடியாத மகிழ்ச்சி, (அத்துடன் நமக்குள் உள்ள அமைதியின் உலகத்துடன், இணைந்திருத்தல் போன்ற பற்பல அற்புதங்களை நாம் அனுபவிப்பது பற்றியது. தெளிவாகச் சொல்வதானால், எனது நோக்கம் அமைதிபற்றிய உங்கள் புரிதலை வளர்த்துக் கொள்வதற்கும் உங்களுக்குள் இருக்கும் அமைதியுடன் தொடர்புகொள்வதன் விளைவுகள்பற்றி அறிந்துகொள்வதற்கும் உதவி செய்வ தாகும். ஆனால் வெளிப்புற இரைச்சலில் இருந்து அமைதிக்கான உங்கள் பயண த்தை நீங்கள் மட்டுமே மேற்கொள்ள முடியும். எவராலும் உங்களுக்கு அமைதி யைக் கொடுக்க முடியாது. உங்களுக் காக, உங்களுக்குள், உங்களால் மட்டுமே அதைக் கண்டுகொள்ள முடியும். அவ்வாறு செய்யும்போது, "நீங்கள் யார்?" என்பதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள். நம் வாழ்வில் தாமாகவே நிகழும் பல விடயங்கள் உள்ளன. இவை நமக்கு எளிதாக நடைபெறும் விடயங்கள். ஆனால், மன அமைதியைக் கண்டறி வதற்கு இடைவிடாத முயற்சி தேவைப்படு கிறது. பூரண விழிப்புணர்வுடன் இருப்ப தற்கு முயற்சி தேவைப்படுகிறது.

ஐன்ஸ்டினின்கூற்றுப்படி,
"விவேகமானது வாழ்நாள் முழுவதும் செய்யும் முயற்சியின் விளைவேயன்றி ஏட்டுக் கல்வியினால் கிடைப்பது அல்ல."




இந்தப் புத்தகத்தில் வரும் கதைகளையும், கருத்துக்களையும் படிக்கும்போது நாம் அதிகமாக நம் வாழ்வில் கொண்டாட வேண்டும் என்பதைப்பற்றிய ஒரு கண்ணோட்டத்தில் பார்த்து ரசிக்கக்கூடிய மனநிலை உண்டாகும்.

வேறு ஒரு கண்ணோட்டத்தில் பார்த்து ரசிக்கக்கூடிய மனநிலை உண்டாகும். அதை நாம் அதிகமாக நம் வாழ்வில் கொண்டாட வேண்டும்.
அதுவே நம் அற்புதமான மனித இயல்பு. மேலும் நீங்கள் சந்தித்துத் தெரிந்து கொள்ள வேண்டும் என நான் விரும்பும் குறிப்பிடத்தக்க நபர் ஒருவர் உள்ளார். ஆனால், அந்த நபரைப்பற்றி மேலும் விவரமாக சிறிதுநேரத்தில் அறிந்து கொள்வோம்.

பலர் தம்மைச் சுற்றி அதிகரித்து வரும் இரைச்சல், தங்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்துவதாகக் கூறுகின்றனர். நமது நெரிசலான நகரங்களில் மேம்படுத்தப்பட்ட கணினி மயமாக்கலால் பரபரப்பாகியுள்ள வாழ்க்கை முறையில் எளிமையான ஏகாந்த நிலையில் இருப்பதற்கான வாய்ப்புகளை யும், நேரத்தையும் கண்டுகொள்வது பெரும்பாலும் கஷ்டமாக இருக்கிறது. இத்தகைய 'வளர்ச்சி' கிராமப் புறங்களைக் கூடச் சென்றடைந்து, மக்களுக்கு மிகவும் தேவைப்படும் நன்மைகளையும் வாய்ப்பு களையும் கொண்டுவரும். அதேசமயத் தில், தனி நபர்கள் மற்றும் சமூகங் களுக்குப் புதிய கோரிக்கைகளையும் முன் வைக்கிறது.

இதுபோன்ற புதிய கண்டுபிடிப்புகள் உருவாக்கும் அற்புதமான சாத்தியங் களைக்கொண்ட இந்தக் காலகட்டத்தில், உயிர் வாழ்வது அற்புதமாக இருந்த போதிலும், சிலவேளைகளில் இத்தகைய வளர்ச்சியுடன் இணைந்துவரும் இரைச்சல், வரவேற்கப்படாத கவனச் சிதறல்போல் உணரப்படலாம்.

நம்மால் தீர்வு காண முடியாதது போலிருக்கும் பிரச்சினைகள், சிக்கல்கள், நம்மால் ஆறுதல்படுத்தமுடியாத பதற்றங் கள், சுய சந்தேகங்கள், நம்மால் பூர்த்தி செய்ய முடியாததுபோலத் தென்படும். இலட்சியங்கள், மற்றும் எதிர்பார்ப்புகள் போன்று நம் மனதினுள் நாம் அடிக்கடி உருவாக்கும் இரைச்சலுடன் ஒப்பிடுகை யில், வெளி இரைச்சல் உண்மையில் மிக அற்பமானதே. பிறர்மீது எரிச்சல், மனக் கசப்பு, கோபம் உண்டாகலாம். நம் மீது நாம் ஏமாற்றமடையலாம். இன்பத்தையும் பாதுகாப்பையும் தேடி நாம் தினசரி மனதில் செய்யும் குட்டிக்கரணங்கள் நம் மனதை ஒருமுகப்படுத்த முடியாமல், குழப்பத்தையும், விடயங்களைத் தள்ளிப் போடுவதையும் செய்ய நேரிடும். இப் புத்தகத்தில் எதிர்மறையான எண்ணங்கள் நம்மீது ஏற்படுத்தும் தாக்கத்தைப் பற்றியும் அதைவிடுத்து எப்படி ஆழமான, என்றுமே மாற்றமில்லாததுமான, எண்ணங் களுக்கெல்லாம் அப்பாற்பட்ட நம் சுயத்தைக் கண்டறிவது என்பதைச் சொல்லப்போகிறேன்.

## ஒரு வித்தியாசமான பாதை

எனது அணுகுமுறை சரியானது என்று எவ்வாறு எனக்குத் தெரியும்? அது எனக்குப் பயனளித்ததால், நம்பிக்கை யுடன் அதை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். எனக்குத் தாகமாக இருந்ததால், நான் ஒரு கிணற்றை வந்தடைந்தேன். என் தாகம் தணிந்தது. வேறு ஏதாவது அணுகுமுறைகள் இருக்கின்றனவா? நிச்சயமாக இருக்கின்றன. ஏன் நான் அந்த முறைகள் பக்கம் போகவில்லை? ஏனெனில், என் தாகம்தான் தணிந்து விட்டதே!

உங்கள் மதம், தார்மீகம், அல்லது அரசியல் நம்பிக்கைகள் எதுவாக இருந் தாலும் அல்லது எந்த நாட்டைச் சேர்ந் தவராயிருந்தாலும் வயது, பால்நிலை, பாலியற் கருத்துக்கள் எதுவாக இருந்தா லும் உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எனது அணுகுமுறையினைப் பயன் படுத்தலாம். உங்களின் எந்தவொரு நம்பிக்கைக்கும் இது மாற்றீடு.



Vlambaram - January 01, 2025.qxp_Vlambaram-Front 2025-01-02 1:00 PM Page 19



# வாகன விபத்துகளில் மூன்றாம் நபருக்கு ஏற்படும் பாதிப்புகள்



சிவ. பஞ்சலிங்கம், B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு
416.321.0999

**உங்களின் தவறால் வாகன விபத்துகளில் மூன்றாம் நபருக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கு காப்புறுதி எங்கு கை கொடுக்கும்? எங்கு கை விடும்? எங்கு தங்களை இறுக்கி பிடிக்கும்?**

உங்களின் வாகனக் காப்புறுதித் திட்டங்களில் 'மூன்றாம் நபர் பொறுப்புக் காப்புறுதி' (Third party Liability insurance coverage) என்றதொரு முக்கிய மான பிரிவு சேர்க்கப்பட்டுள்ளது என்பது எல்லோரும் அறிந்ததொரு விடயமாகும். கனடாவில் தமிழர் அதிக மாக வாழும் ஒன்ராறியோ மாகாணத்தில் வாகனம் செலுத்துவோர் குறைந்தது $200,000 டொலர்வரை அந்த நட்டஈட்டுப் பிரிவு இருக்கவேண்டும் என்பது சட்டரீதியான தொரு நிபந்தனையாகும்.

இங்கு நான் இந்தப் பிரிவு தொடர்பாக முக்கியமானதொரு எச்சரிக்கைத் தகவல் ஒன்றினை சில நிமிடங்களில் சொல்லப் போகிறேன். ஆர்வமிருந்தால் கேளுங்கள்.

இந்தக் குறிப்பிட்ட காப்புறுதிப் பிரிவு என்பது வாகன விபத்துகளில் உங்களின் தவறுகள் காரணமாக ஏனையோருக்கு ஏற்படும் பின்வரும் ஆபத்துகளுக்கு தங்கள் சார்பில் பாதுகாப்பினை வழங்குகின்றது.

* உங்களின் தவறால் மூன்றாம் நபருக்கு ஏற்படுத்தப்படும் உடல் காயங்கள், உயிர் இழப்புகள்.
* உங்களின் தவறால் மூன்றாம் நபரின் வாகனங்கள், மற்றும் உடைமைகளுக்கு ஏற்படும் பாதிப்புகள்.
* உங்களின் தவறால் மூன்றாம் நபருக்கு ஏற்பட்ட உடனடி மருத்துவ செலவுகளின் மீள் வழங்கல்கள்.
* உங்கள் சார்பில் சமூகமளிக்கும் சட்டத் தரணிகள், புலனாய்வாளர்கள், காப்புறுதி மதிப்பீட்டாளர்கள் (Insurance Adjusters) போன்றோரின் பணிகளுக்கான சட்டரீதி யான செலவுகள்.

அதாவது வாகன விபத்துகளில் தவறு என்ற உங்கள் பொறுப்புக் காரணமாக ஏனையோருக்கு ஏற்படும் பாதிப்புகளுக் கும் அதனைக் கையாள்வதற்காக ஏற்படும் செலவுகளையும் உடன்படிக்கையில் குறிப் பிடப்பட்ட வரையறைத் தொகைவரை கம்பனி நிவாரணமாக வழங்கும்.

இந்தக் குறிப்பிட்ட வாகனக் காப்புறுதித் திட்டப் பிரிவு இருப்பதால் நீங்களும் நிம்மதிப் பெருமூச்சுடன் வாகனம் செலுத்த லாம். வாகனங்களோடு சம்பந்தமாக உங்களுக்கு எதிராக எவராவது வழக்குத் தொடர்ந்திருந்தாலும் அதனையும் காப்புறுதிக் கம்பனியே பார்த்துக்கொள்ளும்.

இதில் இன்னுமோர் விடயம், உங்களில் தவறு உள்ளதொரு விபத்தில் இன்னொரு வருக்கு ஏற்பட்ட உடல் காயம் என்பது அவரின் வாழ்வினை நிரந்தரமாக முடக்கு மளவுக்கு இருந்தால் (Catastrophic injury) அவர் மேலதிகமாகப் பெரும் தொகை நட்டஈடு கோரி உங்களின் காப்புறுதிக் கம்பனியில் நீதிமன்ற வழக்குத் தாக்கல் செய்து பெரும் தொகை பணம் பெறுவதும் கனடாவில் நடந்து வருகின்றது.

இப்படியான நீதிமன்ற வழக்குகளில் ஒரு மில்லியன் டொலர் நட்டஈடு வழங்க வேண்டுமென தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது எனக் கருதுவோம்.

உங்கள் வாகனக் காப்புறுதித் திட்டத்தில் $200,000 டொலர் வரையே இந்தப் பிரிவு இருப்பதால் பத்து லட்சம் (ஒரு மில்லியன்) டொலர் பாதிக்கப்பட்டவருக்கு நட்டஈடு வழங்கவேண்டும் என்ற தீர்ப்பில் என்ன நடக்கும்?

இங்கு 'Absolute liability provision' என்னும் சட்டப் பிரிவின்படி உங்களின் காப்புறுதிக் கம்பனி உங்கள் சார்பில் உங்கள் தவறுக்காக பாதிக்கப்பட்ட மூன்றாம் நபருக்கு பத்து லட்சம் தொகை யினையும் வழங்கியே தீரவேண்டும் என வலியுறுத்துகின்றது.



காப்புறுதிக் கம்பனியினர் மீதமுள்ள அந்தத் தொகைகள் யாவற்றினையும் உங்கள் சார்பில் பாதிக்கப்பட்டவருக்கு வழங்கிவிட்டு அதனை உங்களிடமிருந்து சட்டரீதியாக அறவிட முயற்சிப்பர்.

அந்தப் பணத்துக்காக சட்ட ரீதியாக உங்கள் வீடுகள், சொத்துக்களை ஈடாகவும் (Lien) பிடிப்பர்.

இந்த நிலைமை பலருக்குக் கனடாவில் நடந்துள்ளது என்பதனை கனடாவின் காப்புறுதிச் (Insurance hot line news) செய்திகள்மூலம் அறிந்துகொள்ளலாம்.

**இப்படியான நிலைமைகள் ஏற்படாமல் இருக்கவேண்டுமானால் தீர்வு என்ன?**

உங்களின் வாகனக் காப்புறுதிகளில் இப் 'பொறுப்புக் காப்புறுதி' (Liability coverage) என்பதன் தொகையினைச் சற்று மேலதிக பணம் செலுத்திக் குறைந்தது இரண்டு மில்லியன் டொலர் வரை வாகனக் காப்புறுதி உடன்படிக்கை களில் வைத்திருக்க வேண்டும் எனக் கனடாவில் காப்புறுதிக் கம்பனிகளை பிரதிநிதித்துவம் செய்யும் அரச நிறுவனம் (Insurance Bureau of Canada) வாகனம் செலுத்துவோரை வலியுறுத்துகின்றது.

இங்கு இன்னுமோர் விடயத்தினையும் சொல்லியேயாக வேண்டும்.

வாகனமோட்டும் சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாத ஒருவரிடம் வாகனத்தினை ஓட்டுவதற்கு வழங்கி விபத்து நடந்தால்?

அல்லது உங்களின் சாரதி அனுமதி பத்திரம் புதுப்பிக்காத நிலைமை, மற்றும் ரத்து செய்யப்பட்ட நிலைமையில் வாகனம் செலுத்தி விபத்து நடந்தால்?

அல்லது மதுபோதையில் வாகனம் செலுத்தி விபத்து நடந்தால்?

அல்லது சொந்தப் பாவனைக்கு உபயோ கிக்கும் வாகனத்தினை எதாவது வர்த்தகத் துக்கு உபயோகிக்கும்போது விபத்து நடந்தால்?

காப்புறுதிக் கொடுப்பனவுகள் எவையுமே உங்களின் பாதிப்புகளுக்குக் கிடைக்காது.

மேற்குறிப்பிட்ட நிலைமைகளில் மூன்றாம் நபர் எவருக்காவது அவர்களின் உடலுக்கு அல்லது உடைமைகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டால் மட்டும் உங்களின் காப்புறுதிக் கம்பனி அதற்குரிய நட்ட ஈட்டினை வழங்கிவிட்டு (According to the absolute liability provision) அதனைச் சட்ட ரீதியாக உங்களிடம் அறவிட முயற்சிப்பர்.

இப்படியான சந்தர்ப்பங்களை எதிர் கொண்டோர் வங்குரோத்து நிலைமைக்குத் தள்ளப்பட்டமையும் உண்டு என்பதும் செய்திகளாக வெளிவந்துள்ளது.

இந்த நிலைமை உருவாகாமல் இருக்க வேண்டுமானால் அந்த விடயத்திலும் யாக்கிரதையாக இருந்தேயாக வேண்டும்.

## தமிழ்நாட்டில்...

09ஆம் பக்கத்தொடர்ச்சி

யமையாமையை உணர்ந்து அதைக் கற்கின்றனர்" என்கிறார்.

"அரசுப்பள்ளிகளில் இந்தி கற்பிக்கப்பட வேண்டும்" என்பதை வி.பாலகுருசாமி முன்மொழிகிறார். "அரசியல் தளத்தில், திமுக இந்தித் திணிப்பை எதிர்த்தாலும், அரசுப் பள்ளி மாணவர்கள் இந்தி கற்க அது வழிவகை செய்யவேண்டும். இந்தித் திணிப்பை எதிர்ப்பதன்மூலம் இந்தி கற்கும் ஒருவரது உரிமையை திமுக மறுக்கிறது" என்கிறார் அவர்.

திராவிட எழுத்தாளர் மதிமாறன், "இந்தி யைப் பாடத்திட்டத்தில் சேர்த்தால், அதுவே ஒரு சுமையாக மாறி, பள்ளியில் இருந்து இடைநிற்போரை அதிகப்படுத்தி விடும் அபாயம் உள்ளது" என்கிறார்.

பள்ளியளவில் மாணவர்கள் இந்தி கற்க விரும்புகின்றனர் என்றால், ஒன்றிய அரசு மேலும் அதிக எண்ணிக்கையில் கேந்திரிய வித்யாலயா பள்ளிகளை தமிழகத்தில் தொடங்கி, அவற்றின்மூலம் இந்தியைக் கற்பிக்கலாம் என்கின்றனர் கல்வியாளர்கள் சிலர்.

பல கோரிக்கைகளை முன்வைத்து, போராட்டங்களை நடத்திய பிறகுதான் கேந்திரிய வித்யாலயா பள்ளிகளில் தமிழ் கற்பிக்கப்படுகிறது. பள்ளியளவில் மாணவர் கள் இந்தி கற்க விரும்பினால், அவர்கள் தாராளமாக கேந்திரிய வித்யாலயா பள்ளி களில் சேர்ந்து படிக்கலாம். நெடுங் காலமாக இப்பள்ளிகளில் இந்தியும் ஆங்கிலமும் கற்பிக்கப்பட்டு வருகின்றன என்கிறார் பிரின்ஸ் கஜேந்திர பாபு.

கடந்த காலங்களில், தமிழ்நாட்டு மக்கள் இந்தியை விரும்பியும் வெறுத்தும் வந்துள்ளனர். 1937ஆம் ஆண்டு, சி. ராஜ கோபாலாச்சாரியின் காங்கிரஸ் அரசு, இந்தியைத் திணிக்க முயன்றபோது, சமூக சீர்திருத்தக்காரரும் சுயமரியாதை இயக்கத் தையும் திராவிடர் கழகத்தையும் தோற்று வித்தவருமான பெரியார், அதனைக் கடுமையாக எதிர்த்தார்.

2018ஆம் ஆண்டு தக்ஷிண பாரத் இந்தி பிரச்சார சபா அதன் வரலாற்றை வெளியிட்டது. அதில், 1922ஆம் ஆண்டு ஈரோடு மாவட்டத்தில், இந்தி கற்பிக்கும் பயிற்சிப் பள்ளியை நடத்த, தனது சொந்தக் கட்டடத்தை பெரியார் கொடுத்தார் என்கிற செய்தி அதில் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காங்கிரஸ் இயக்கத்தில் பெரியார் இருந்த போது, அது நிகழ்ந்ததாக, கொளத்தூர் மணி குறிப்பிடுகிறார். அதோடு நில்லாமல், அங்குப் படித்த முப்பது மாணவர்களில், பதினைந்து பேருக்கு உணவும் தங்குமிட வசதியும் பெரியார் செய்து கொடுத்தார். 1925ஆம் ஆண்டு பெரியார் காங்கிரஸில் இருந்து விலகினார். 1938ஆம் ஆண்டு இந்தித் திணிப்பிற்கு எதிராகப் பெரியார் தெருவிலிறங்கிப் போராடினார். தமிழை வளர்த்த சைவ மடங்கள் கூட இந்தித் திணிப்பை எதிர்க்கவில்லை. பெரியார் அவர்களையும் போராட்டத்திற்கு அழைத் தார். "உங்கள் தமிழுக்குப் பேராபத்து வந்திருக்கிறது. தெருவுக்கு வந்து போரா டுங்கள். அதை விட்டுவிட்டு, எதை நீங்கள் படித்துக்கொண்டு இருக்கிறீர்கள்?" என்று பெரியார் கேட்டதாக மதிமாறன் விளக்கினார்.




1968ஆம் ஆண்டு இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம் உச்சத்தில் இருந்த போது, இந்தித் திரைப்படங்களை வெளி யிட்ட திரையரங்குகளுக்குமுன் சென்று எவரும் போராடவில்லை என்கிற தகவலை யும் மதிமாறன் பகிர்ந்துகொண்டார்.

தமிழகத்தில் இந்தி வளர்ந்துவரும் இப் போக்கு, தமிழ்நாட்டுக்கும் தமிழருக்கும் நல்லதா? கெட்டதா? காலம் தீர்மானிக்கும்.

Vlambaram - January 01, 2025.qxp_Vlambaram-Front 2025-01-02 1:00 PM Page 20



# கனவுகள் கைவசப்படும்



Dr. ஃபஜீலா ஆசாத்
சர்வதேச வாழ்வியல் ஆலோசகர்

உங்களுக்குப் பிடித்த ஒரு சுற்றுலாத் தலத்திற்கு விடுமுறைக்குச் செல்கிறீர்கள் என்றால் பயணம் தொடங்கியதிலிருந்து அந்த இடத்தை அடைவதுவரை மகிழ்ச்சியாக அங்குசென்று, பார்த்து, ரசித்து, அனுபவிக்க மகிழ்ச்சியான எண்ணங்களுடன் செல்வீர்களா அல்லது அங்கு சென்று சேரும்வரை பயணம் முழுவதும் பதட்டத்துடன் செல்வீர்களா?

ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்வில் ஒரு தேடல், இலக்கு இருக்கும். அதனை நோக்கிய பயணம்தான் மனிதனை உயிர்ப்புடன் வைத்திருக்கிறது. அந்தத் தேடல் அல்லது இலக்கு எதற்காக என்று சற்றே ஆழமாக ஆராய்ந்து இருக்கிறீர்களா? நீங்கள் யாரிடம் கேட்டாலும் அவர்களின் அந்த இலக்கை மட்டும் அடைந்துவிட்டால் அதன் பிறகு நிம்மதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்ந்து விடுவோம் என்றே பதில் வரும்.

சற்று நிதானமாகச் சிந்தித்துப் பாருங்கள். எது செய்துகொண்டு இருப்பவர்களும் இறுதியாக நிம்மதியான மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்வதற்காகவே அதனைச் செய்து கொண்டிருக்கின்றனர் என்பதுதான் நிதர்சனம். ஆனால் அந்த மகிழ்ச்சியான வாழ்க்கையை அடைவதற்கான பயணத்தை அவர்கள் ஒரு பதட்டத்துடனும் பரபரப்புடனுமே கடக்கின்றனர் என்பதுதான் இங்கு முரண்படுகிறது.

உண்மையில் நீங்கள் அடைய நினைக்கும் இலக்கு உங்கள் வாழ்வில் மகிழ்ச்சியை ஏற்படுத்தும் என்றால் அதனை நோக்கிய பயணமும் மகிழ்ச்சியானதாகத்தானே இருக்க வேண்டும். மகிழ்ச்சி என்பது நீங்கள் செல்லும் சுற்றுலாத் தலத்தில் இல்லை. அது உங்கள் மனதில் இருக்கிறது. அதுபோல்தான் வாழ்விலும் நீங்கள் விரும்பும் ஒன்று கிடைப்பதினால் ஏற்படும் மகிழ்ச்சியும்.

ஒரு கற்பனைக்காக... ஏதோ ஒன்றைத் தேடி எந்த நிறைவும் இன்றி பரபரப்பாக மன அமைதியற்று இயங்கிக் கொண்டு இருக்கும் இந்தச் சூழலில் நீங்கள் எது கிடைத்தால் மகிழ்ச்சியாக இருப்பீர்கள் என்று நினைக்கிறீர்களோ அது நாளையே உங்களுக்கு கிடைத்து விடுகிறது என்றால் அதன் பின்வரும் நாட்களும், வாழ்க்கையும் ஒரு fairy taleபோல் இருக்கும் என்று நினைக்கிறீர்களா? இந்தக் கதையை சற்று பாருங்கள்.

அவர் ஒரு பெரிய யோகி. ஒரு நாட்டுக்கு அவர் வந்திருக்கிறார். ரொம்ப மகிமையான ஓர் ஆன்மிகவாதி அவர் என்று தெரியும்போது நாட்டு மக்கள் எல்லோரும் திரண்டு அவரைப் பார்ப்பதற்காகக் காத்துக் கிடக்கின்றனர்.

அவரிடம் என்ன கேட்டாலும் கிடைக்கும் என்ற நம்பிக்கை கொண்ட மக்கள் தவத்தில் இருக்கும் அவர் கண் திறப்பதற்காகக் காத்துக் கிடக்கின்றனர்.

அவரும் கண் திறந்து கூடிநின்ற மக்களைப் பார்த்து சொல்கிறார். "இன்று இரவு நீங்கள் தூங்கப் போவதற்கு முன்னாடி உங்கள் விருப்பங்களை நினைத்து மூன்று முறை மூச்சை உள்ளிழுத்து வெளியே விட்டு உங்களுக்கு வேண்டியதை நீங்கள் எழுதி வைத்துவிட்டுத் தூங்குங்கள். நீங்கள் காலையில் கண்விழித்து பார்க்கும்போது நீங்கள் எது கேட்டிருந்தாலும் அது உங்களுக்குக் கிடைத்திருக்கும்" என்று வரம் கொடுக்கிறார்.



சிலரால் நம்ப முடிகிறது, பலரால் நம்ப முடியவில்லை. இருந்தாலும் எல்லோருமே இது நடந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்கிற ஆசையும், நப்பாசையும், பேராசையுமாக அவரை வணங்கி விட்டு அந்த இடத்தை விட்டுச் சொல்கின்றனர்.

எல்லோருமே தங்கள் வீடு வந்தவுடனே என்ன கேட்கலாம் எனப் பரபரப்பாக இருக்கின்றனர். இது நடக்குமா நடக்காதா என்பது ஒருபுறம் இருக்க, நடக்காவிட்டால் இழப்பதற்கு எதுவுமே இல்லை. நடந்தால் நினைத்துப் பார்க்க முடியாத பேரானந்தமாக இருக்குமே என்பதால் இரவு வருவதற்காகக் காத்திருக்கின்றனர்.

சூரியன் மறைந்து நிலவு உச்சம் தொட ஒவ்வொருவரும் தங்கள் விருப்பங்களைப் பட்டியலிட்டு எழுதி வைத்துக்கொண்டு அந்த யோகி சொன்னதுபோல் கேட்கின்றனர். பின் பரபரப்பில் தூக்கம் வராமல் தவித்து ஒரு வகையாகத் தூங்கி எழுந்து காலையில் கண் விழித்துப் பார்த்தால் என்ன ஆச்சரியம்! யார் யார் என்னென்ன கேட்டிருந்தார்களோ அது எல்லாமே அவர்களுக்குக் கிடைத்திருந்தது.

அந்த மக்களால் மகிழ்ச்சியைத் தாங்க முடியவில்லை. பொதுவாக ஒரு பொருள் வாங்கினால் அதனை உறவினர்கள் நண்பர்களிடம் காட்டி மகிழ்வது மனித இயல்புதானே. எனவே அனைவரும் தங்களுக்குக் கிடைத்துள்ளவற்றை மற்றவர்களிடம் சொல்லிப் பகிர்ந்து கொள்ள நினைத்து வெளியில் வருகின்றனர். தங்களுக்குக் கிடைத்ததை எல்லாம் பெருமையாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகின்றனர்.

தங்களுக்குக் கிடைத்ததை சொல்வதுடன் தங்கள் நண்பர்கள், உறவினர்கள், அண்டை வீட்டாரெல்லாம் என்ன கேட்டிருக்கின்றனர் என்பதைத் தெரிந்து கொள்ளும் ஆர்வமும் இயல்பாக அவர்களுக்குள் எழுகிறது. அன்று அதிகாலையிலேயே ஊர் மக்கள் அனைவரும் கும்பல் கும்பலாகத் தெருவில்கூடி விடுகின்றனர். ஒருவருக்கொருவர் தங்களுக்குக் கிடைத்தவற்றைச் சொல்லியும் பிறருக்கு கிடைத்தவற்றை கேட்டறிந்து கொண்டும் அந்த ஊரே மகிழ்ச்சிக் கூச்சலில் அல்லோல கல்லோலப்படுகிறது.

ஆனால் மகிழ்ச்சிக் கூச்சலெல்லாம் சில நிமிடங்கள்தான். சட்டென ஒரு அமைதியும், விரக்தியும் சூழ அனைவரும் கலைந்து செல்ல ஆரம்பித்து விட்டனர். என்ன நடந்தது?
முதலில் ஒவ்வொருவரும் தங்களுக்கு விரும்பியது கிடைத்த மகிழ்ச்சியில் பிறரிடம் அதைப் பகிர்ந்து கொண்டிருந்த அதேநேரம் மற்றவர்களுக்குக் கிடைத்த பொருட்களைப்பற்றி அறிய வந்ததும் தனக்குக் கிடைத்ததுடன் பிறருக்குக் கிடைத்த பொருட்களை ஒப்பிட்டுப் பார்த்து வருத்தம் கொள்ள ஆரம்பித்து விட்டனர்.

இறுதியில் எந்த முயற்சியும் எடுக்காமல் கேட்டவை கிடைத்தும் மகிழ்ச்சியை மட்டும் இழந்து நின்றனர். ரொம்ப சாதாரணமாக எல்லாம் அவர்களுக்குக் கிடைத்தும்கூட அவர்கள் யாராலும் நிம்மதியாக இருக்க முடியவில்லை.

விருப்பங்களுக்கும், ஆசைகளுக்கும் முதலிடம் கொடுக்கும் மனித மனம் எப்படிப்பட்டது என்பதை அலசும் ஒரு உளவியல் கதை இது.

கேட்பது கிடைப்பதில் வரும் மகிழ்ச்சியை விட மகிழ்ச்சியான வாழ்க்கை முறையில் கிடைப்பவை அனைத்தும் அர்த்தமுள்ளதாக இருக்கும். மகிழ்ச்சியை உங்கள் மூச்சுக் காற்றாக மாற்றிக் கொள்ளாத வரை மனஅழுத்தம் என்பது ஒரு நாளைக்குப் பத்து முறையோ, பத்து நாளைக்கு ஒரு முறையோ உங்கள் வாழ்க்கையில் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது.

மனஅழுத்தம் ஏற்படுவதற்கான அடிப்படையே எதிர்பார்ப்புக்கும், நடைமுறைச் சாத்தியத்திற்கும் உள்ள இடைவெளிதான். நீங்கள் ஒரு பொருளை விரும்பி அது கிடைக்காமல் போகும்போதோ அல்லது ஒரு வெற்றிக்கான முயற்சிகளை எடுத்து அந்த முயற்சி கைகூடாமல், வெற்றி கிடைக்காமல் போகும்போதோ மனஅழுத்தம் ஏற்படுவதாக உணர்வீர்கள். இது இது செய்தால் இது கிடைக்கும். பெரும்பாலும் இப்படி இப்படி முயற்சித்தால் இதில் வெற்றி பெற்று விடுவோம் என்று நீங்கள் முன்பே உங்கள் மனதில் ஒரு திட்டம் வகுத்து அதன் பலனையும் கற்பனை செய்து ஓர் எதிர்பார்ப்புடன்தான் எந்த ஒரு செயலையும் செய்யத்தொடங்கி இருப்பீர்கள். அதுபடி எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை என்றவுடன் உங்கள் மனம் விரக்தியில் சோர்ந்து விடுகிறது.

ஆனால் இங்கு முக்கியமாக, மகிழ்ச்சி என்பது இலக்கை அடைவதில் இல்லை அதற்கான பயணத்தில்தான் இருக்கிறது என்பதைத்தான் பெரும்பாலானோர் உணர மறந்து விடுகின்றனர். இதைமட்டும் புரிந்து கொண்டால் விளைவு எதுவாக இருந்தாலும் அவர்களுக்கு அந்த முயற்சியில் ஈடுபட்டிருந்த காலங்கள் என்றென்றும் நினைத்து நினைத்து அசை போடக் கூடிய இனிய மலரும் நினைவுகளாக மனதில் பதிந்திருக்கும்.

இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் நேர்மறையான மனநிலையுடன் செய்யக்கூடிய முயற்சிகள் பெரும்பாலும் வெற்றியிலேயே முடிவடைகிறது என்கிறது மனஇயல். மற்றொரு கோணத்தில் பார்ப்பதென்றால் நீங்கள் விரும்பும் ஒன்று நீங்கள் நினைத்த நேரத்தில் நினைத்த வகையில் கிடைக்கவில்லை என்பதால் நீங்கள் தோற்று விட்டீர்கள் என்று அர்த்தமல்ல என்பதைப் புரிந்து கொள்ளக்கூடிய பக்குவமும் அதைவிடச் சிறந்த ஒன்று. இதைவிட தகுந்த நேரத்தில் கிடைக்கலாம் என்ற நேர்மறை எண்ணமும் இருந்தால் எந்தச் சூழலிலும் மனம் அமைதியற்றுத் தவிக்காது.

மேலும், ஒன்றை நோக்கிச் செல்லும்போது உங்களிடம் இருக்கும் அல்லது உங்கள் முயற்சிகளின்போது Bi-Productஆகக் கிடைக்கும் பொருட்களைப்பற்றி என்றாவது யோசித்திருக்கிறீர்களா? தண்ணீருக்காகத் தோண்டும்போது தங்கம் கிடைத்தாலும் தான் தேடியது கிடைக்கவில்லையே என்று கவலைப்படும் ஒருவரை நீங்கள் எந்த வகையில் சேர்ப்பீர்கள்? வாழ்க்கை பல புதிர்கள் நிறைந்தது. எந்த இடத்தில் எந்தப் பொக்கிஷம் இருக்கும் என்பதை எவராலும் வரையறுக்க முடியாது. விரிந்த பார்வையும், பரந்த மனப்பான்மையும் உடையவர்களுக்கு வானமே எல்லை.

எனவே உங்கள் கனவுகளையும் இலக்குகளையும் அடையும் பயணத்தை ஓர் இன்பச் சுற்றுலா செல்லும் பயணம்போல் மேற்கொள்ளுங்கள், இலக்குகளை கைகளுக்கு எட்டாதவையாக அதேநேரம் கண்களுக்கு எட்டக்கூடியதாக நிர்ணயுங்கள். ஒன்றை அடைந்தவுடன் அடுத்தது என்று இலக்குகளை விரிவுபடுத்திச் செல்லுங்கள். ஒன்று கிடைக்கவில்லையா? வேறொன்றை இலக்காக்கி உங்கள் பயணத்தைத் தொடருங்கள். ஓடிக் கொண்டிருக்கும் ஆறு என்றும் சேறாக மாறாது. இயங்கிக் கொண்டிருக்கும் மனிதனுக்கும் மனச் சோர்வு என்றும் வராது.

இலக்குகளும் இலட்சியங்களும் அடைந்து தீர்ப்பதற்கல்ல, அனுபவித்து வாழ்வதற்கு என்று உங்கள் ஆழ்மனதிற்கு உணர்த்துங்கள். மனஅழுத்தம் என்பது கனவிலும் வராது, கனவுகள் என்றென்றும் கைவசப்படும்.

புத்தாண்டு வாழ்த்துகள்
2025